MITRA TIMES Tam & Eng Monthly Postal Registration No. TN/CH(C)/523/16-18
Registered with Registrar of News Paper for India Under No. TNBIL/2015/64028 - APRIL 2016 ISSUE

PS Precious Smiles
DENTAL CENTRE™
YOUR SMILE IS IMPORTANT TO US
An ISO 9001:208 Certified
Sterilization Monitoring Certified
HEALTHY
MOUTH=BODY




PS Precious Smiles
DENTAL CENTRE™
YOUR SMILE IS IMPORTANT TO US
To book your prior appointment 044-6565 5678
www.psdentalcentre.com | follow us /psdentalcentre

| T.Nagar | K.K. Nagar | E.C.R.Palavakkam |
|---|---|---|
| 45, KC Enclave, First Floor, Bazulah Road, T.Nagar, Chennai- 600017. Ph: 044 4333 5678 | 33/18 Anna Main Road M.G.R. Nagar, Chennai - 600 078. Ph: 044 4333 5678 | 3/620, East Coast Road, Palavakkam, Chennai - 600 041. Ph: 72000 10144 |



# மித்ரா டைம்ஸ்

# MITRA TIMES

ஆண்டு-1 Volume-1 | இதழ்-11 Issue-11 | ஏப்ரல் - 2016 April - 2016 | தமிழ் & ஆங்கிலம் மாத இதழ் Tamil & English Monthly | விலை ரூ.10/- Price Rs.10/- | ஆண்டு சந்தா ரூ.120/- Annual Subscription Rs.120/-



## வெற்றி மீது வெற்றி வந்து யாரை சேரும்??

மே-19-2016

மித்ரா டைம்ஸின் கருத்துக்கணிப்பு

## ஆட்கள் தேவை

KRM
Home Makers Pvt Ltd



சென்னை-குளத்தூரில் புதிதாக கட்டப்பட்டு வரும் Multi Storage கட்டிடத்திற்கு அனுபவம் வாய்ந்த பில்டிங் கான்ட்ராக்டர்ஸ் (Rate & Labor contractor), முன் அனுபவம் வாய்ந்த சிவில் காண்ட்ராக்டர், எலக்ட்ரிகல் காண்ட்ராக்டர் மற்றும் பிளெமிங் காண்ட்ராக்டர் வேலைக்கு, அனுபவமும் திறமையும் வாய்ந்த என்ஜினீயர்கள், எலக்ட்ரீசியன் மற்றும் எழுத படிக்கத் தெரிந்த செக்யூரிட்டி நபர்கள் வரவேற்கப்படுகிறார்கள்.

தொடர்புக்கு :
**MITRA**
**GROUP OF COMPANIES**
501, Suruthi block,
Chitra Avenue,
9, Choolaimedu high Road,
Chennai-94, Phone : 23743007
e-mail.msmoorthy68@yahoo.co.in

# நீதிக்கதை

ஒரு பணக்காரர் தன் வீட்டில் கடவுள் சிலை வைக்க , ஒரு சிற்பியை அணுகி சென்றார். அவர் சென்ற நேரம் அந்த சிற்பி ஒரு பெண் கடவுள் சிலையை செதுக்கிக் கொண்டிருந்தார்.

கொஞ்ச நேரம் அவர் செதுக்குவதை வேடிக்கை பார்த்த அவர் சிற்பி செதுக்கிய இரண்டு சிலைகளும் ஒரே மாதிரி இருப்பதை கவனித்தார். உடனே பணக்காரர் “ ஒரே கோவிலில் எப்படி ஒரே மாதிரி சிலைகள் வைப்பார்கள் ? “ இல்லை இந்த இரண்டு சிலைகளும் வேறு வேறு கோவிலுக்காக செதுக்குகிறீர்களா?“ என்று சிற்பியிடம் கேட்டார்

சிற்பி சிரித்துக்கொண்டே “இல்ல ஐயா கீழே கிடக்கும் சிலையானது உடைந்து போனது“ என்றார். பணக்காரர் ஆச்சரியத்துடன் “ என்ன சொல்றீங்க மிகவும் அழகாக தானே இருக்கிறது அந்த சிலை எந்த பாகமும் உடையக்கூட இல்லையே “ எனக் கேட்டார். “அந்த சிலையின் மூக்கில் சின்ன கீறல் இருக்கிறது பாருங்கள்“ என்றார் சிற்பி. “ஆமாம் .அது சரி ..இந்த சிலையை எங்கே வைக்கப்போகிறீர்கள் ? “ என்று கேட்டார் பணக்காரர்

“இது கோவில் கோபுரத்தில் நாற்பது அடி உயரத்தில் வரும் சிலை “ உளியை உயர்த்திக் காட்டி சொன்னார் சிற்பி பணக்காரர் வியப்புடன் “ நாற்பது அடி உயரத்தில் இந்த சின்ன கீறலை யார் கண்டுபிடிக்கப் போகிறார்கள் ? இதற்காக ஏன் இன்னொரு சிலை செய்கிறாய் முட்டாள் “ என்றார். “அந்த சிலையில் கீறல் இருப்பது எனக்கு தெரியுமே ..எப்போது அந்த கோவில் வழி சென்றாலும் எனக்கு என் தொழிலில் உள்ள குறை உறுத்துமே ..அதனால் தான் இன்னொரு சிலை செய்கிறேன் “ என்றார் சிற்பி.

M.S.மூர்த்தி

Owned and published by **M.SUNDARAMOORTHY** from No. 602 Suruthi Block, Chitra Avenue, 9, Choolaimedu High Road, Chennai - 600 094. and printed by him at **SRI PADMALAYA PRINTERS**. No.8/18, Manali Salai, Korukkupet, Chennai - 600 021. Editor : **M.SUNDARAMOORTHY**



**மித்ரா டைம்ஸ்**
மாத இதழ்
ஆண்டு-1 ஏப்ரல் -2016 இதழ் -11

*வெளியீட்டாளர்-ஆசிரியர்*
**M.சுந்தரமூர்த்தி**
*இணையாசிரியர்*
**K.பாலகிருஷ்ணன்**
*தலைமை துணையாசிரியர்கள்*
**G.ராம்மோகன்**
**S.சுஜாதா மூர்த்தி**
*துணையாசிரியர்*
**M.G.சேகர்**
*உதவி ஆசிரியர்கள்*
**V.மோகன்ராஜ்**
**கோவை.K.விஜயராஜ்**
*தலைமை நிருபர்கள்*
**R.குணசேகர்**
*மதுரை* **S.செல்லப்பாண்டியன்**
*நிருபர்கள்*
*பொள்ளாச்சி* **M.சாகுல் ஹமீது**
*திண்டுக்கல்* **முபாரக்**
*சேலம்* **பிரவீன்குமார்**
*திருப்பூர்* **R.அருண்**
*சென்னை* **R.பாண்டியன்**
*கோயில்பட்டி* **S.சுரேஷ்குமார்**
*வடிவமைப்பு*
**V.ராஜராஜேஸ்வரி**
*சட்ட ஆலோசகர்*
**V.N.பிரசாத்** M.A.,B.L.,

*அலுவலக முகவரி*
# 602, ஸ்ருதி பிளாக், சித்ரா அவென்யூ,
9, சூளைமேடு ஹைரோடு, சென்னை -94.
போன் : 044-23744661, 23743007
e-mail:mitratimes2015@gmail.com

இந்த இதழில் வெளியாகும் செய்திகள் அனைத்திற்கும் இணையாசிரியரே பொறுப்பாவார்.

எல்லா வழக்குகளும் சென்னையில் உள்ள உரிய நீதிமன்றங்களின் வரம்பிற்கு மட்டுமே உட்பட்டது

# என் எண்ணம்...

இந்தியாவில் தேசிய அளவிலும், மாநில அளவிலும் ஏராளமான அரசியல் கட்சிகள் உள்ளன. இந்த கட்சிகள் எல்லாமே ஏதாவது ஒரு காரணத்தால் பிளவு பட்டு போயிருக் கின்றன. 1949ல் திராவிடர் கழகத்திலிருந்து பிரிந்த அண்ணாதுரை தி.மு.க. என்ற தனிக் கட்சியை தொடங்கினார். தி.மு.க. விலிருந்து 1972ல் எம்.ஜி.ஆர் அவர்கள் வெளியேற்றப் பட்டதும் அ.தி.மு.க. என்ற கட்சியை துவக்கினார். தமிழ்நாட்டில் மூன்று பொதுத் தேர்தல்களிலும் பெரும் பான்மையாக இடங்களை வென்று ஆட்சியில் இருந்த காங்கிரஸ் 1967ல் தி.மு.க.விடம் படு தோல்வி அடைந்தது. அதன் பிறகு கடந்த 50 வருடங் களாக தி.மு.க., அ.தி.மு.க. என்று இந்த இரண்டு திராவிடக் கட்சிகளே மாறி மாறி ஆட்சி செய்து வருகின்றன.



ஆசிரியர்
எம்.எஸ்.மூர்த்தி

ஆனால் 2016 தமிழக சட்டமன்றத் தேர்தலில் இந்த திராவிட கட்சிகளை தவிர்த்து ஒரு புதுக் கூட்டணி அரசு அமைய போவது என்றும் அப்படி இல்லை தி.மு.க. தான் ஆட்சியை பிடிக்கும் என்றும் நிச்சய வெற்றி அ.தி.மு.க எனவும், பா.ஜ.க., பா.ம.க.வுக்கும் வாய்ப்பு உள்ளது என்று பல்வேறு ஊடகங்கள் தங்களின் கருத்து கணிப்புகளை வழங்க தயாராகி வருகின்றன. தேர்தல்கள் என்றாலே அரசியல் கட்சிகளுக்கு "ஆட்சி" என்கிற "டெண்டர்" யாருக்கு என்பது போன்ற கடுமையான போட்டி தான். ஊடகங்களை பொறுத்தவரை பம்பர் விற்பனை ஒன்று தான் குறிக்கோள்.

மக்களை பொறுத்தவரை தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டு தேர்தல் முடியும் வரை ஹீரோ. தேர்தல் முடிந்து அடுத்த தேர்தல் வரை அவர்கள் ஜீரோ. இந்த நிலை மாற வேண்டாமா? இந்த தேர்தலில் புதிய வரவாக 1 கோடி இளம் வாக்காளர்கள் உள்ளனர். அவர்கள் மாற்றத்தை ஏற்படுத்துவார்களா? கோஷங்களை மட்டுமே நம்பி வாக்களிக்காமல் அலசி ஆராய்ந்து, தன் மூத்த வாக்காளர்களையும் சிந்திக்க வைத்து சரியான பாதையை தேர்ந்தெடுத்து ஓட்டு போடுவது தான் அவர்கள் ஆற்ற வேண்டிய ஜனநாயக கடமை.

தேர்தலின் போது அரசியல்வாதிகள் கூறும் "மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு என்ற ஜனநாயகத்தின் மேன்மையை நிலைநிறுத்த வேண்டியது கடமை மட்டுமல்ல உரிமையும் கூட. "ஓட்டு என்பது வெறும் சீட்டு அல்ல." புரட்டு அரசியல் கட்சிகளுக்கு வைக்கும் வேட்டு. லஞ்ச லாவன்யமற்ற மனதுடன் மக்கள் தங்கள் தீர்ப்பை கொடுக்கவேண்டும். தீர்ப்பை வழங்கிய பின் அதை மாற்றவோ திரும்ப பெறவோ ஓட்டளித்த மக்களுக்கு உரிமையில்லை. இதை உணர்ந்து தீர்ப்பை வழங்க வேண்டும். இல்லையேல் அந்த மகேசனாலும் எதுவும் செய்ய முடியாது. கடமையை செய்யாதவர்கள் உரிமையை கோர முடியாது.

# வெற்றி மீது வெற்றி வந்து யாரை சேரும்?

## மித்ரா டைம்ஸின் கருத்துக்கணிப்பு



மித்ரா டைம்ஸ் இதழ் 2016 சட்ட மன்ற தேர்தல் பற்றிய கருத்துக்கணிப்பை நடத்தி வருகிறது. இந்த தேர்தலில் எந்த கட்சி வேட்பாளருக்கு வாக்களிப்பீர்கள் என்ற கேள்விக்கு பொது மக்களின் கருத்துக்கள் கேட்டறியப்பட்டது, அதன் அடிப்படையில் ஒவ்வொரு கட்சிகளின் வெற்றி வாய்ப்புக்கான வேட்பாளர் பட்டியல் வெளியிடப்பட்டு வருகிறது. வரும் சட்டமன்ற தேர்தலில் ஒவ்வொரு கட்சிகளின் வேட்பாளர்கள், அக்கட்சிகளின் வெற்றி வாய்ப்பு பற்றிய விவரம் தொடர்ந்து நமது மித்ரா டைம்ஸ் குழுமத்தின் மூலம் வெளிவரும்( மக்கள் ராஜ்யம், கழுகு பாலிடிக்ஸ், நமது போலீஸ்) ஆகிய பத்திரிகைகளில் தொடர்ந்து வெளியிடப்பட இருக்கிறது.

இந்த கருத்துக்கணிப்பில் முதலில் 15 மாவட்டங்களில் வெற்றி வாய்ப்புள்ள வேட்பாளர்களின் முதல் சர்வே பட்டியல் கொடுக்கப்பட்டுள்ளது. அதன்படி, தி.மு.க.விற்கு கீழ்கண்ட தொகுதிகளில் வெற்றி வாய்ப்பு பிரகாசமாக இருக்கிறது. மொத்தம் 133 எம்.எல்.ஏ. சீட்டுகள் மீதமுள்ள 17 மாவட்டங்களின் வெற்றி வேட்பாளர்கள் பட்டியலும், அ.தி.மு.க., ப.ஜ.க.,,தே.மு.தி.க.,பா.ம.க. மக்கள் நல கூட்டணி, மற்றும் பிற கட்சிகளின் கருத்துக்கணிப்பு அடுத்து வரும் இதழ்களிலும் தொடரும்.



**வடக்கு மண்டலம்**

**திருவள்ளூர் மாவட்டம்**

1. கும்மிடிப்பூண்டி
கோவிந்தராஜன் (தலைமை செயற்குழு உறுப்பினர்)
2.பொன்னேரி
கோளூர் கதிரவன் (மாவட்ட துணைச் செயலாளர்)
3.திருவள்ளூர்
வி.ஜி.ராஜேந்திரன் (செயற்குழு உறுப்பினர்)
4.பூந்தமல்லி
பரந்தாமன் (சட்டத்துறை மாநில இணை செயலாளர்.
5.ஆவடி
நாசர் (திருவள்ளூர் தெற்கு மாவட்ட செயலாளர்)
6.மதுரவாயல்
காரம்பாக்கம் கணபதி (பகுதி செயலாளர்)
7.அம்பத்தூர்
ஜோசப் சாமுவேல் (சென்னை மாநகராட்சி மண்டலக்குழு தலைவர்)
8.மாதவரம்
எஸ்.சுதர்சனம் (சென்னை வடக்கு மாவட்டச் செயலாளர்)
9. திருவொற்றியூர்
கே.பி.பி.சாமி (முன்னாள் அமைச்சர்)

**சென்னை மாவட்டம்**

1. ராதாகிருஷ்ணன் நகர்
வழக்கறிஞர் ஷிம்லா முத்துச்சோழன் (மகளிரணி பிரசாரக்குழு செயலாளர்)
2. பெரம்பூர்
ஆர்.டி.சேகர் (இளைஞரணி மாநில துணைச்செயலாளர்)
3. கொளத்தூர்
மு.க.ஸ்டாலின்(பொருளாளர்)
4. வில்லிவாக்கம்
ரங்கநாதன் (முன்னாள் எம்.எல்.ஏ.)
5. திரு.வி.க. நகர்
தாயகம் கவி (இளைஞரணி மாநில துணை செயலாளர்)
6. எழும்பூர்
தமிழன் பிரசன்னா (செய்தி தொடர்பு இணைச் செயலாளர்)
7. ராயபுரம்
'ஐ டிரீம்' மூர்த்தி (பகுதி செயலாளர்)
8. துறைமுகம்
சேகர்பாபு (சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளர்)
9. சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி
ஜெ.அன்பழகன் (சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர்)
10. ஆயிரம்விளக்கு
ஹசன் முகம்மது ஜின்னா (இளைஞரணி மாநில துணை செயலாளர்)
11. அண்ணா நகர்
எம்.கே.மோகன் (முன்னாள் கவுன்சிலர்)
12. விருகம்பாக்கம்
தனசேகரன் (செயற்குழு உறுப்பினர்)
13. சைதாப்பேட்டை
மா.சுப்பிரமணியன் (சென்னை தெற்கு மாவட்டச் செயலாளர்)
14. தியாகராயநகர்
கு.க.செல்வம் (தலைமை நிலையச் செயலாளர்)
15. மயிலாப்பூர்
வேலு (பகுதிச் செயலாளர்)
16. வேளச்சேரி
வாகை சந்திரசேகர் (கலை இலக்கிய பகுத்தறிவு போவை மாநிலச் செயலாளர்)

**காஞ்சிபுரம் மாவட்டம்**

1. சோழிங்கநல்லூர்
விஸ்வநாதன் (சென்னை தெற்கு மாவட்ட துணைச் செயலாளர்)
2. ஆலந்தூர்
ஆர்.எஸ்.பாரதி (அமைப்பு செயலாளர்)
3. ஸ்ரீபெரும்புதூர் (தனி)
பழனிச்சாமி (மாவட்ட ஊராட்சிக்குழு முன்னாள் தலைவர்)
5. தாம்பரம்
எஸ்.ஆர். ராஜா (நகர செயலாளர்)
6. செங்கல்பட்டு
சண்முகம் (மறைமலைநகர் நகர செயலாளர்)
7. திருப்போரூர்
இதயவர்மன் (ஒன்றிய பொறுப்பாளர்)
8. செய்யூர் (தனி)
ஏழுமலை (ஊராட்சி தலைவர்)
9. மதுராந்தகம்
டாக்டர் ஆர்.டி.அரசு (மாநில மருத்துவர் அணி துணைச் செயலாளர்)
10. உத்திரமேரூர்
சுந்தர் (காஞ்சிபுரம் மேற்கு தெற்கு மாவட்ட செயலாளர்)
11. காஞ்சிபுரம்
சன் பிராண்ட் ஆறுமுகம் (நகர செயலாளர்)

**வேலூர் மாவட்டம்**

1. அரக்கோணம்
வழக்கறிஞர் எழில் இனியன் அல்லது ராஜ்குமார் (மாவட்ட துணைச் செயலாளர்)
2. சோளிங்கர்
அசோகன் (சோளிங்கர் ஒன்றிய செயலாளர்)
3. காட்பாடி
துரைமுருகன் (முதன்மை செயலாளர்)
4. ராணிப்பேட்டை
காந்தி (வேலூர் கிழக்கு மாவட்ட செயலாளர்)
5. ஆற்காடு
ஈஸ்வரப்பன் (மாவட்ட இளைஞரணி அமைப்பாளர்)
6. வேலூர்
கார்த்திகேயன் (முன்னாள் மேயர்)
7. அணைக்கட்டு
நந்தகுமார் (வேலூர் மத்திய மாவட்ட செயலாளர்)
8. கீழ்வைத்தியணான் குப்பம் (தனி)
சீத்தாராமன் (2011 தேர்தலில் போட்டியிட்டவர்)
9. குடியாத்தம்
ராஜமார்த்தாண்டன் (மத்திய மாவட்ட இளைஞரணி அமைப்பாளர்)
10. வாணியம்பாடி
தேவராஜ் (வேலூர் மேற்கு மாவட்டச் செயலாளர்)
11. ஆம்பூர்
ஞானவேலன் (மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்)
12. ஜோலார்பேட்டை
கே.சி.அழகிரி (ஒன்றிய செயலாளர்)
13. திருப்பத்தூர்
அரசு (நகர செயலாளர்)

**திருவண்ணாமலை மாவட்டம்**

1. செங்கம்
கிரி (மாவட்ட ஊராட்சிக்குழு முன்னாள் தலைவர்)
2. திருவண்ணாமலை
எ.வ.வேலு (தி.மலை தெற்கு மாவட்டச் செயலாளர்)
3. கீழ்பென்னாத்தூர்
பிச்சாண்டி (முன்னாள் அமைச்சர்)
4. கலசப்பாக்கம்
ஸ்ரீதர் (நகராட்சி முன்னாள் தலைவர்)
5. போளூர்
ஏழுமலை (சேத்துப்பட்டு ஒன்றிய செயலாளர்)
6. ஆரணி
சிவானந்தம் (வடக்கு மாவட்ட செயலாளர்
7. செய்யாறு
வேல்முருகன் (தி.மலை வடக்கு மாவட்ட துணைச் செயலாளர்)
8. வந்தவாசி
அம்பேத்குமார் (சினிமா இயக்குநர்)

**விழுப்புரம் மாவட்டம்**

1. திருக்கோவிலூர்
க.பொன்முடி (விழுப்புரம் மத்திய மாவட்டச் செயலாளர்)
2. விழுப்புரம்
ஜனகராஜ் (செயற்குழு உறுப்பினர்)
3. வானூர்
மைதிலி ராஜேந்திரன் (மாவட்ட துணைச் செயலாளர்)
4. விக்கிரவாண்டி
ராதாமணி (மத்திய மாவட்ட அவைத்தலைவர்)
5. ரிக்ஷிவந்தியம்
அங்கயற்கண்ணி (விழுப்புரம் தெற்கு மாவட்டச் செயலாளர்)
6. சங்கராபுரம்
வழக்கறிஞர் செல்வநாயகம் (செயற்குழு உறுப்பினர்)
7. உளுந்தூர்பேட்டை
வைத்தியநாதன் (ஒன்றிய செயலாளர்)
8. கள்ளக்குறிச்சி (தனி)
காமராஜ் (மாவட்ட துணை செயலாளர்)
9. செஞ்சி
செஞ்சி மஸ்தான் (விழுப்புரம் வடக்கு மாவட்டச் செயலாளர்)
10. திண்டிவனம் (தனி)
சீதாபதி சொக்கலிங்கம் (மரக்காணம் ஒன்றிய சேர்மன்)
11. மயிலம்
டாக்டர் மசிலாமணி (மாநில தீர்மானக்குழு துணை தலைவர்)

**கடலூர் மாவட்டம்**

1. குறிஞ்சிப்பாடி
எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் (கடலூர் கிழக்கு மாவட்டச் செயலாளர்)
2. திட்டக்குடி (தனி)
வெ.கணேசன் (கடலூர் மேற்கு மாவட்டச் செயலாளர்)
3. நெய்வேலி
சபா.ராஜேந்திரன்
4. கடலூர்
ஏ.ஜி.ஆர்.சுந்தர் (மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்)
5. பண்ருட்டி
டாக்டர். நந்தகோபாலகிருக்ஷ்ணன் (2014 எம்.பி.வேட்பாளர்)
6. புவனகிரி
தங்க ஆனந்தன் (தொழிற்சங்க செயலாளர்)
7. சிதம்பரம்
பேராசிரியர் சபாபதிமோகன்
8. விருத்தாசலம்
வேல்முருகன் (ஒன்றியச் செயலாளர்)
9. காட்டுமன்னார்கோயில் (தனி)

கிள்ளை ரவீந்திரன் (செயற்குழு உறுப்பினர்)

**மேற்கு மண்டலம் சேலம் மாவட்டம்**

1. கெங்கவல்லி (தனி)
குணசேகரன் (முன்னாள் எம்.எல்.ஏ.)
2. ஆத்தூர் (தனி)
ரேகா பிரியதர்ஷினி (சேலம் முன்னாள் மேயர்)
3. ஏற்காடு (எஸ்.டி.)
மாறன் (கடந்த இடைத்தேர்தலில் போட்டியிட்டவர்)
4. வீரபாண்டி
வீரபாண்டி ஆ.ராஜா (கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர்)
5. சேலம் தெற்கு
வக்கீல் குணசேகரன் (முன்னாள் மண்டலக் குழுத் தலைவர்)
6. சேலம் வடக்கு
பனைமரத்துப்பட்டி ராஜேந்திரன் (சேலம் மத்திய மாவட்ட செயலாளர்)
7. சேலம் மேற்கு
பன்னீர்செல்வம் (சேலம் முன்னாள் துணைமேயர்)
8. ஓமலூர்
அருள் பிரசன்னா (மாவட்ட மாணவரணி அமைப்பாளர்)
9. சங்ககிரி
எஸ்.ஆர்.சிவலிங்கம் (சேலம் மேற்கு மாவட்ட செயலாளர்)
10. மேட்டூர்
ரவிச்சந்திரன் (நங்கவல்லி ஒன்றிய செயலாளர்)
11. எடப்பாடி
சுப்பிரமணி (பொதுக்குழு உறுப்பினர்)

**கிருஷ்ணகிரி மாவட்டம்**

1. தளி
ஒய்.பிரகாஷ் (மேற்கு மாவட்டச் செயலாளர்)
2. ஒசூர்
மாதேஸ்வரன் (நகர செயலாளர்)
3. வேப்பன அள்ளி
செங்குட்டுவன் (மாவட்ட அவை தலைவர்)
4. கிருக்ஷ்ணகிரி
சுகவனம் (கிழக்கு மாவட்ட செயலாளர்)
5. பர்கூர்
வெற்றிச்செல்வன் (முன்னாள் எம்.பி.)
6. ஊத்தங்கரை (தனி)
டாக்டர்.மாலதி (மாவட்ட மருத்துவர் அணி)

**தர்மபுரி மாவட்டம்**

1. அரூர்(தனி)
கிருக்ஷ்ணகுமார் (தொழிலாளர் அணி மாவட்ட அமைப்பாளர்)
2. பாப்பிரெட்டி பட்டி
பிரபு ராஜசேகரன் (மாவட்ட மருத்துவர் அணி அமைப்பாளர்)
3. தர்மபுரி
தடங்கம் சுப்ரமணி (மாவட்டச் செயலாளர்)
4. பாலக்கோடு
சூடப்பட்டி சுப்பிரமணியம் (மாவட்ட துணைச் செயலாளர்)
5. பென்னாகரம்
தர்மச்செல்வன் (மாவட்ட பொருளாளர்)

**நாமக்கல் மாவட்டம்**

1. ராசிபுரம்(தனி)
வி.பி.துரைசாமி (முன்னாள் துணை சபாநாயகர்)
2. சேந்தமங்கலம் (எஸ்.டி.)
பொன்னுசாமி (முன்னாள் எம்.எல்.ஏ.)
3. நாமக்கல்
காந்திச் செல்வன் (நாமக்கல் கிழக்கு மாவட்டச் செயலாளர்)
4. பரமத்தி வேலூர்
கே.எஸ்.மூர்த்தி (நாமக்கல் மேற்கு மாவட்டச் செயலாளர்)
5. திருச்செங்கோடு
பார்.இளங்கோவன் (மாநில விவசாய அணி இணைச் செயலாளர்)
6. குமாரபாளையம்
வெப்படை செல்வராஜ் (ஒன்றிய செயலாளர், பள்ளிபாளையம்)

**ஈரோடு மாவட்டம்**

1. ஈரோடு கிழக்கு
சு.முத்துசாமி (ஈரோடு தெற்கு மாவட்ட செயலாளர்)
2. ஈரோடு மேற்கு
எல்லப்பாளையும் சிவக்குமார் (ஈரோடு முன்னாள் ஒன்றிய செயலாளர்)
3. மொடக்குறிச்சி
பிரகாக்ஷ் (ஈரோடு தெற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்)
4. பெருந்துறை
கே.பி.சாமி (பெருந்துறை ஒன்றியச் செயலாளர்)
5. பவானி
பவானி கே.ஏ. சேகர் (ஈரோடு வடக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர்)
5. அந்தியூர்
நல்லசிவம், (ஈரோடு வடக்கு மாவட்ட செயலாளர்)
6. கோபிச்செட்டிபாளையம்
என்.கே.கே.பி. ராஜா (ஈரோடு முன்னாள் மாவட்டச் செயலாளர்)
7. பவானிசாகர் (தனி)
கருணாநிதி (உக்கரம் பஞ்சாயத்து தலைவர்)

**கோவை மாவட்டம்**

1. மேட்டுப்பாளையம்
சி.ஆர். ராமச்சந்திரன் (கோவை புறநகர் வடக்கு மாவட்ட செயலாளர்)
2. கவுண்டம்பாளையம்
பையாகவுண்டர் (மாவட்ட விவசாய அணி அமைப்பாளர்)
3. தொண்டாமுத்தூர்
சேனாதிபதி (தொண்டாமுத்தூர் ஒன்றியச் செயலாளர்)
4. கோவை வடக்கு
வீரகோபால் (வடக்கு மாவட்ட செயலாளர்)
5. கோவை தெற்கு
டாக்டர் கோகுல் (மாநில மருத்துவரணி து. அமைப்பாளர்)
6. சிங்காநல்லூர்
கார்த்திக் (பீளமேடு பகுதிச் செயலாளர்)
7. சூலூர்
சன் ராஜேந்திரன் (மாவட்ட முன்னாள் இளைஞரணி அமைப்பாளர்)
8. கிணத்துக்கடவு
குறிச்சி பிரபாகரன் (குறிச்சி பகுதி செயலாளர்)
9. பொள்ளாச்சி
தமிழ்மணி (புறநகர் தெற்கு மாவட்ட செயலாளர்)
10. வால்பாறை
திப்பம்பட்டி ஆறுச்சாமி (மாநில ஆதிதிராவிட குழுவின் துணை

செயலாளர்)

**நீலகிரி மாவட்டம்**

1. கூடலூர்
காசிலிங்கம் (பந்தலூர் நகர செயலாளர்)
2. உதகை
இளித்துறை ராமச்சந்திரன் (குன்னூர் எம்.எல்.ஏ.)
3. குன்னூர்
பா.முபாரக் (மாவட்ட செயலாளர்)

**திருப்பூர் மாவட்டம்**

1. அவிநாசி
ஆனந்தன் (தலைமை செயற்குழு உறுப்பினர்)
2. திருப்பூர் தெற்கு
செல்வராஜ் (திருப்பூர் வடக்கு மாவட்டச் செயலாளர்)
3. திருப்பூர் வடக்கு
கோவிந்தசாமி (மாநில தொழிற்சங்க துணைத் தலைவர்)
4. தாராபுரம்
செல்வராஜ் (தெற்கு மாவட்ட வழக்கறிஞரணி அமைப்பாளர்) அல்லது பிரபாவதி (முன்னாள் எம்.எல்.ஏ.)
5. காங்கயம்
பத்மநாபன் (தெற்கு மாவட்ட செயலாளர்)
6. உடுமலைப்பேட்டை
ஜெயக்குமார் (தெற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர்)
7. மடத்துக்குளம்
ஜெயராமகிருக்ஷ்ணன் (ஒன்றிய செயலாளர்)
8. பல்லடம்
சோமசுந்தரம் (வடக்கு மாவட்ட துணைச் செயலாளர்)

**மற்ற தொகுதி நிலவரம் அடுத்த இதழில்**

**மித்ரா குழும**
**கருத்து கணிப்பு**




சென்னை ரஷ்யன் கலாச்சார மையத்தில் அமெரிக்க பல்கலை கழகத்தில் இணைந்த அகடமி ஆப் யூனிவர்சல் குளோபல் பீஸ் அமைப்பின் சார்பில் உயர்நீதி மன்ற நீதிபதி NFJ பொன்னுதுரை தலைமையில் மகா பைன் ஆர்ட்ஸ் அனுராதா ஜெயராம் முன்னிலையில் அகடமி ஆப் யூனிவர்சல் குளோபல் பீஸ் அமைப்பின் தலைவர் டாக்டர் R.K.சாம்சன் திரைப்படத்துறையில் 40 ஆண்டு காலம் சேவையை பாராட்டி மக்கள் தொடர்பாளர் கலைச்செல்வம் கடையம் R.ராஜூவிற்கு கௌரவ டாக்டர் பட்டம் வழங்கிய போது எடுத்த படம். உடன் PRO Dr. நெல்லை சுந்தர்ராஜன் உள்ளார்.



# உலகின் மிகப்பெரிய அறுவை சிகிச்சை

மருத்துவம் பெரிதாக முன்னேறாத அந்தக் காலத்தில், எல்லாவகை நோய்களுக்கும் உள் மருந்து மட்டுமே தரப்பட்டது. உடலின் வெளியில் ஏற்படும் காயங்கள், கட்டிகள் போன்றவற்றிற்கும் உள் மருந்தே கொடுக்கப்பட்டது. சூரணம், லேகியம் தான் உள் மருந்து. கட்டிகள் போன்ற வியாதிகள் அகற்றப்படாமல்



மருந்து மூலம் குணமாகிவிடும் என்றே நம்பப்பட்டது. கடந்த காலங்களில் கொடிய நோய்களால் பாதிக்கப்பட்டு அதிக எண்ணிக்கையில் மக்கள் இறந்தனர்.

அறுவை சிகிச்சை முறைகள் 16ம் நூற்றாண்டில்தான் தொடங்கின. முதன் முதலாக இங்கிலாந்தில் ஒரு நோயாளியின் நுனி நாக்கில் இருந்த சிறு கட்டி ஒன்றை அறுவை சிகிச்சை மூலம் அகற்றினார்கள்.

உலகில் முதன்முதலாக நடந்த இந்த அறுவை சிகிச்சைக்கு தேவைப்பட்ட கருவிகள் ஒரு எரியும் மெழுகுவர்த்தி, குறடு ஒன்று, வலி மிகுதியால் நோயாளி துள்ளி விழாமல் அழுத்திப் பிடித்துக்கொள்ள இரண்டு பேர் இருந்தனர். இவர்களை வைத்துதான் அந்த அறுவை சிகிச்சை நடந்தது. அதன் பின்பு விஞ்ஞான வளர்ச்சியால் மருத்துவம் படிப்படியாக முன்னேறியது. அறுவை சிகிச்சையிலும் பெரும் முன்னேற்றம் ஏற்பட்டது. இதற்கு உதாரணமாக அமெரிக்காவில் நடந்த அறுவை சிகிச்சையை சொல்லலாம்.

இது மிகச் சிறந்த கடினமான அறுவை சிகிச்சை என்று உலகமே ஒத்துக்கொண்டது. 1978ல் மே மாதம் கலிபோர்னியா பல்கலைக்கழக மருத்துவர்களால் 30 வயது பெண்ணின் கருப்பையில் இருந்த கட்டி அகற்றப்பட்டது. இது என்ன பெரிய விஷயமா என்று கேட்பவர்களுக்கு, அந்தக் கட்டியின் எடை 90 கிலோ என்பது தான் பதில். இந்தக் கட்டியை உடைத்த போது அதில் இருந்து 74 லிட்டர் நீர் வெளியேறியது. பின்பு 18 கிலோ எடை கொண்ட சதைப் பிண்டமாக அந்தக் கட்டி இருந்தது.

அறுவை சிகிச்சைக்கு முன்பு 172 கிலோ எடையிருந்த அந்த பெண் சிகிச்சை முடிந்ததும் 82 கிலோவாக எடை குறைந்தார். ஏழு மருத்துவர்களால் செய்யப்பட்ட, இந்த அறுவை சிகிச்சை தான் உலகிலேயே பெரியது என்று சொல்லப்படுகிறது.

**K.G.ரெட்டி**



அச்சமில்லை அச்சமில்லை என்று பாரதி பாடிய பாடல் ஆண்களுக்கு மட்டுமா என்ன? பெண்களுக்கும் தான். ஆனால், நம் நாட்டில் பெண்கள் அச்சமில்லாமல் நடு இரவில் மட்டும் அல்ல பகல் வேளையிலேயே சென்றுவர என்னென்ன தேவை என்பதைப் பார்க்கலாமா? ஒரு பெண்ணை ஆணானவன் தப்பான எண்ணத்துடன் பின்தொடரும் பொழுது அவனைக் கண்டு அஞ்சாமல் தைரியமாக அந்தச் சூழ்நிலையைச் சமாளிக்க பெண் தனது மனதைத் தயார்ப்படுத்த வேண்டும். பயம் உள்ளே இருந்தாலும் அதனை வெளியே காட்டக்கூடாது.



# பெண்ணே அச்சம் தவிர்

நம்மிடமிருந்து பொருளைப் பறித்துக் கொண்டு செல்லத் திட்டமிடும் பொழுதும், நம்மைக் கடத்தவோ அல்லது கற்பழிக்கவோ முயலும் போதும் பயத்தில் உறைந்து விடாமல் அந்தத் தவறை நடப்பதற்கு அனுமதிக்காமல் அந்தச் சூழ்நிலையை புத்திசாலித்தனமாக எதிர்கொள்ள வேண்டும்.

பெண்களுக்கு மிகவும் சவாலான, ஆபத்தான சூழ்நிலைகள் ஏற்படும் பொழுது அதைச் சமாளிக்க, கராத்தேயில் கருப்பு பட்டை வாங்கி இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. தற்காப்புக் கலைகளின் வகுப்புகளையோ அல்லது அதுபோன்ற ஆபத்தான சூழ்நிலையைப் பெண்கள் எப்படி சமாளிக்கிறார்கள் என்பது போன்ற வீடியோக்களையோ பார்த்தாலே போதும்.





இக்கட்டான சூழ்நிலைகள் நமது உடலையும் மனதையும் திட்டமிட்டு செயல்படுத்தி நம்முடைய சக்தியைப் பிரயோகப்படுத்தி எதிரியைப் பலமிழக்கச் செய்ய முடியும். நம்முடைய சோர்வையோ, பயத்தையோ வெளிப்படுத்தாமல் இருப்பதே நமக்கு பெரிய பலமாகும். நம்முடைய சிறந்த ஆயுதம் நம்முள்ளே இருக்கும் ஆறாவது அறிவாகும்.

மிருகங்கள்கூட பிறக்கும் பொழுதே வாழ்வதற்குத் தேவையானவற்றை எதிர்த்துப் போராடிவெல்லும் ஆற்றலைப் பெற்றிருக்கின்றன. மனிதர்களாகிய நாம் ஒருவர்மேல் நம்பிக்கை வைப்பதற்கு முன் அவர்களைச் சரியாக மதிப்பிட்டோமா என்று பலமுறை யோசித்து நம் உள்ளுணர்வைப் பின்பற்றி நடப்பது நல்லது.

தொலைபேசியில் பொது இடங்களில் பேசும்பொழுது சுற்றுப்புறத்தில் என்ன நடக்கிறது என்பதில் கவனமுடன் இருப்பது அவசியம். யாராவது நம்மைப் பின்தொடர்வது போல் இருந்தால் உடனே ஏதாவது கடைக்குள் நுழைந்து அவர்கள் நம்மைப் பின்தொடர்வதை அங்கிருப்பவர்களிடமோ அல்லது காவல்துறைக்கோ தெரியப்படுத்தலாம். நம்முடைய முட்டிக்கை மிகவும் பலமானது. எதிரியின் கண்கள், தொண்டை, இடுப்பு மற்றும் முட்டிக் கால்கள் பலவீனமானது. எதிர்த்துப் போராட வேண்டிய சூழ்நிலையில் இவற்றை மனதில் கொண்டு தாக்குதல் நடத்தினால் வெற்றி நிச்சயம். கூட்டமான இடத்தில் நம்மீது தாக்குதல் நடத்த எதிரிக்கு துணிச்சல் இருக்காது.

எனவே ஆள்அரவமற்ற இடத்திற்கு சென்றால்கூட நாம் துரத்தப்படுகிறோம் என்பது தெரிந்தால் ஜிக்ஜாக்காக ஓடி அவனைக் குழப்ப வேண்டும். இதனால் எந்தஒரு ஆயுதம் வைத்திருந்தாலும் அவனால் நம்மைக் குறிபார்த்துத் தாக்க முடியாது.

வீட்டிலிருந்தாலும், வெளி ஊர்களுக்குச் சென்று தனியாகத் தங்க நேரிட்டாலும் பெண்கள் மிகவும் கவனத்துடன் அறைகள் பூட்டப்பட்டிருக்கின்றதா, பாதுகாப்பு எப்படி இருக்கின்றது என்பவற்றை கவனிக்க வேண்டும்.


பெண்களின் கைப்பையில் எப்பொழுதும் சிறிய கத்தி, மிளகாய்ப் பொடி, சிறிய டார்ச்லைட் இவற்றை வைத்திருப்பது தற்காப்பிற்கு மிகவும் உதவியாக இருக்கும். ஆட்டோ அல்லது காரில் தனியாக செல்ல நேரிட்டால் நம்முடைய கைப்பேசியில் நாம் பிரயாணிக்கும் வாகனம், நாம் எங்கிருக்கிறோம் என்பது போன்ற விவரங்களை நம் குடும்ப உறுப்பினர் களுக்கோ அல்லது நம் தோழிகளுக்கோ தெரியப்படுத்துவது நல்லது.

இதனால் வாகன ஓட்டுநர்களும் தவறான எண்ணத்துடன் நம்மை நெருங்க பயப்படுவார்கள். எந்த ஒரு சூழ்நிலையிலும் இந்தச் சூழ்நிலையை நான் தைரியமாகச் சமாளிப்பேன் என்ற உறுதி பெண்ணுக்குள்ளே இருந்தால் அவளை எந்த ஒரு தீய சக்தியாலும் எதுவும் செய்ய முடியாது.

**சுஜாதா மூர்த்தி**

# எழுத்துக்கள் உருவான விதம்

பேச்சு வழக்கை மொழி என்று கூறினர். அந்த மொழியைத் தொடர்ந்து எழுத்து உருவானது. எழுத்தை முதலில் கண்டுபிடித்தது மெசபடோமியாவில் தான் என்பது மொழி ஆய்வாளர்களின் கருத்து.



கி.மு. 4000 ஆண்டிலேயே களி மண்ணை பேப்பர் போல் பயன் படுத்தி, அதில் சட்டங்கள், உடன் பாடுகள், அட்டவணைகள் போன்றவை எழுதப் பட்டன. போகப் போக பேசுகிற மொழியை பிரித்து ஒவ்வொரு எழுத்துக்கும் ஒரு குறியீடுகள் கண்டு பிடிக்கப்பட்டன.

காகிதம் என்று ஒன்று இல்லாத காரணத்தால் ஈரக் களிமண்ணை பரப்பி அதில் எழுத்தாணியால் எழுதி, அது உலர்ந்தவுடன் ஈரக் களிமண்ணை அதன் மீது வைத்து பேக்கிங் செய்து விடுவார்கள். அதை உடைத்து விடாமல் மிக ஜாக்கிரதையாக கொண்டு சென்று சேர்க்க வேண்டும். பெற்றுக்கொண்டவர் பார்சலை லேசாக தட்டி உதிர்த்தால் போதும். உள்ளே உள்ள விஷயத்தை படிக்கலாம்.

ஆயிரக்கணக்கான குறியீடுகளை வேகமாக களிமண்ணில் எழுத கல்வியறிவு அதிகமாக தேவைப் பட்டதால், பள்ளிக்கூடங்கள் ஆரம்பிக்கப்பட்டன. அங்கு சட்டம், மருத்துவம், அரசியல் போன்ற விஷயங் களை எழுதுவதற்கு தனித்தனியாக பயிற்சி அளிக்கப்பட்டது.

இப்படியாக எழுத்து என்பது முழு வடிவம் பெற 800 ஆண்டுகள் பிடித்தன. மொழி, மனிதனின் கைவசப்பட்டவுடன், அடுத்த கட்டமாக இலக்கியம் பிறந்தது. கி.மு.2000 ஆண்டில் பாபிலோனியர் களால் எழுதப்பட்ட சிறுகதைகள், புராணங்கள், சுற்றுலா தகவல்கள், மன்னர் மேற்கொண்ட வேட்டைகள் போன்றவை தொல்பொருள் ஆராய்ச்சிகளில் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன.

பழமொழிகளைக்கூட பாபிலோனியர் கள் விட்டு வைக்கவில்லை. அந்த காலத்தில் அழகு நிலையங்கள் பெண்கள் கூடும் இடமாக இருந்து இருக்க வேண்டும். ஒரு களிமண் குறிப்பில் அழகு நிலையங்கள் இருந்தால், அங்கே கிசுகிசுவும் கூடவே இருக்கும் என்கிற பழமொழி ஒரு கல்வெட்டில் கிடைத்து இருக்கிறது. இன்றளவும் பின்பற்றப்படும் 'வியாபாரத்தில் நண்பர்கள் கிடையாது' என்ற பழமொழியும் களிமண் குறிப்பில் இருந்தது குறிப்பிடத்தக்கது.

**R.ராம்மோகன்**





# பங்குனி உத்திரத்தின் சிறப்பு



முருகப் பெருமான் தெய்வானை திருமணம் நடந்த நாள். வள்ளி அவதரித்த தினம். பார்வதி தேவியை பரமேஸ்வரன் கரம்பிடித்த நாள் இது. மேலும் மதுரையில் மீனாட்சிதேவி சுந்தரேசர் திருக்கல்யாண வைபவம் பங்குனி உத்திரத்தன்று நடை பெறும். தேவேந்திரன் இந்தி ராணி திருமணம் நடைபெற்ற நாள். ராமபிரான் சீதாதேவி, பரதன் மாண்டவி, லட்சுமணன் ஊர்மிளை, சத்ருக்னன் ச்ருத கீர்த்தி ஆகியோருக்கு திருமணம் நடந்த தினம். ஸ்ரீ வில்லிபுத்தூரில் ஆண்டாள் ரங்க மன்னார் திருக்கல்யாண வைபவம் நிகழ்ந்த திருநாளும் பங்குனி உத்திரமே.

பங்குனி உத்திர விரத மகிமையால், அழகு மிக்க 27 கன்னியரை சந்திரன் மனைவியாகக் கொண்டதாகச் சொல்வர். இந்த நாளில் விரதம் மேற்கொண்ட மகா லட்சுமி, விஷ்ணுவின் திருமார்பில் வீற்றிருக்கும் பேறு பெற்றாள்.

தனது தவத்தைக் கலைத்த மன்மதனை, சிவபெருமான் நெற்றிக் கண்ணால் எரித்து சாம்பலாக்கினார். பின்னர், தன்னை வணங்கி மன்றாடிய ரதிதேவியின் வேண்டுகோளுக்கு இரங்கி, மன்மதனை மீண்டும் சிவனார் உயிர்ப்பித்தது பங்குனி உத்திரம் திருநாளில் தான்.

சுந்தரமூர்த்தி நாயனாருக்கு மணக் கோலத்தில் பரமன் காட்சி தந்தது இந்த நாளில் தான். பிரம்மன் தன் நாவில் சரஸ்வதியை வைத்த தினம், பங்குனி உத்திரம் என்பர். சாஸ்தா அவதரித்தது பங்குனி உத்திர திருநாளில். அர்ஜுனன் அவதரித்தது இந்த நாளில்தான். காரைக்கால் அம்மையார் பங்குனி மாதத்தில்தான் முக்தி பெற்றார். காஞ்சியில், பௌர்ணமி திதி கூடிய பங்குனி உத்திரத்தன்று, காமாட்சி ஏகாம்பரேஸ்வரர் திருமணம் நடக்கும். அப்போது அதே மண்டபத்தில் ஏராளமானோர் திருமணம் செய்து கொள்வர். இந்த நாளில் காஞ்சி வரதராஜர் கோயில் பெருந்தேவி தாயார் சந்நிதியில், தேவி பூதேவி, மலையாள நாச்சியார், ஆண்டாள் மற்றும் பெருந்தேவி தாயார் சகிதம் காட்சி தருகிறார் வரதராஜ பெருமாள்.

மேல்கோட்டை என்ற திரு நாராயணபுரத்தில் பங்குனி மாதத்தில் வைரமுடி சேவை விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது. இந்தத் தலம் 'தென்னக பத்ரிகாஸ்ரமம்' எனப்படும்.

வட பத்ரிகாஸ்ரமம் செல்ல இயலாதவர்கள் இங்கு வந்து, நாராயண பெருமாளை தரிசித்தால், பத்ரி போய் வந்த புண்ணியம் உண்டு என்பது ஐதீகம்.

திருவையாறு அருகே உள்ள நவக்கிரக (சந்திரன்) சேத்திரம், திங்களூர். இங்குள்ள சிவாலயத்தில், ஆண்டுதோறும் பங்குனி உத்திர நன்னாளில், காலையில் 6 மணிக்கு சூரியக் கதிர்களும், மறு நாள் மாலை 6.00 மணிக்கு சந்திரனின் ஒளியும் சிவலிங்கத்தின் மீது விழுகின்றன. அப்போது, இங்கு சூரிய சந்திர பூஜைகள் சிறப்பாக நடைபெறுகின்றன. இந்த பூஜையை தரிசித்தால் எல்லா வளமும் பெறலாம் என்பது பக்தர்களது நம்பிக்கை.

திருவையாறு அருகிலுள்ள புண்ணிய திருத்தலம் திருமழபாடியில், பங்குனி மாதத்தில் நடைபெறும் நந்திதேவரின் திருமண வைபவம் வெகு பிரசித்தி. திருமண தோஷம் உள்ளவர்கள், திருமழப்பாடி சென்று இந்த வைபவத்தை தரிசித்தால், விரைவில் திருமணம் நடைபெறும் என்பது ஐதீகம். 'நந்தி கல்யாணம் பார்த்தால் முந்தி கல்யாணம் நடக்கும்' என்று பழமொழியே உண்டு.

சரியாக பங்குனி உத்திரம் அன்று அதிகாலை ஏதாவது பழைமையான முருகன் கோயிலுக்கு சென்று முருகனை தரிசித்து கந்த சஷ்டிகவசம் படித்து வணங்கி வாருங்கள்.

**M.S.மூர்த்தி**



# மாசி மாத நெல்லிக்கனியின் சிறப்பு

நெல்லிக்கனியை அதியமானுக்கு அவ்வை கொடுத்த கனி என்பர். நெல்லிக்கனி மார்கழி, தை மாதங்களில் நன்றாக விளைந்திருக்கும். அதன் பிறகு நான்கு மாதங்கள் வரை விற்பனைக்கு வரும். அதன் பிறகு வராது.

மாசி மாதத்தில் வரும் நெல்லியை சிறப்பித்துச் சொல்வர். இதை சர்வரோக நிவாரணி என்று சொல்லலாம். இது மலமிளக்கி. தாகத்தை தணிக்க வல்லது. இதயத்திற்கு நன்மை தரும். நெல்லிக்காயை கோடைக்காலத்தில் ஏற்படும் பித்த அதிகரிப்பை தணிக்க பயன் படுத்தலாம்.

நெல்லிக்கனி போதிய அளவு கிடைக்காவிட்டால் நெல்லிக்கனி கிடைக்கும் போது நெல்லி பானம் தயாரித்து வைத்துக் கொள்ளலாம். இதற்கு காய்ந்த நெல்லிக்கனிகளை சுத்தம் செய்து கொட்டையை எடுத்து விட்டு இரவில் நீரில் ஊற வைக்க வேண்டும். மண்பானை அல்லது கண்ணாடி பாத்திரம் ஊற வைப்பதற்கு ஏற்றது.

மறுநாள் காலையில் ஊறிய நீரை ஒரு துணியில் வடிகட்டி கொஞ்சம் உப்பு சேர்த்து குடிக்கலாம். சிலருக்கு கோடை கொடுமையாக இருக்கும். பித்தம் அதிகமாகும். சிலருக்கு பசி எடுக்காது. தண்ணீர் அடிக்கடி குடிப்பார்கள். இந்த பிரச்சினைகளை தணிக்க மேற்கூறிய நெல்லி பானத்தை குடிக்கலாம்.


நெல்லிக்கனியை போல வைட்டமின் 'சி' நிறைந்த கனி வேறு இல்லை. ஆரஞ்சு சாற்றை விட 20 மடங்கு சக்தி வாய்ந்தது. ஒரு நெல்லிக்கனி ஒன்றரை ஆரஞ்சு பழத்தில் இருந்து கிடைக்கக் கூடிய 'சி' வைட்டமினை தருகிறது.

இந்திய மக்கள் தொகையில் பெரும்பாலானவர்களுக்கு வைட்டமின் 'சி' குறைவு. இதனாலேயே நோய்கள் தொற்றுகின்றன. நெல்லிக்கனியை தொடர்ந்து உண்டு வருவதால் நோய் தாக்குதலை தவிர்க்கலாம். நெல்லிக் கனி ஒரு முக்கியமான பழ உணவு. இது மருந்தாகவும் இருப்பதால் இதனை தவிர்க்காமல் உண்பது நல்லது.

**சுஜாதா மூர்த்தி**



# மறைந்த உயிரினம் 'பாலிப்புலி'



கடந்த 60 வருடங்களில் மட்டும் மூன்று புலி வகைகள் இந்த பூமியில் இருந்து மறைந்து விட்டன. அவற்றில் முக்கியமானது பாலிப் புலிகள். இந்தோனேஷியாவில் உள்ள பாலித் தீவில் மட்டுமே இந்த புலிகள் காணப்பட்டதால் இப்படியொரு பெயர்.

புலிகள் இனத்திலேயே இதை கடைக்குட்டி என்று சொல்லலாம். பார்ப்பதற்கு மற்ற புலிகளை விட சிறியதாக இருக்கும். ஒரு ஆண் புலி சராசரியாக 90 கிலோ எடை இருக்கும். பெண் புலியோ 65 முதல் 80 கிலோ எடை வரை இருக்கும். பாலிப் புலிகளை வித்தியாசப்படுத்திக் காட்டுவது அவற்றின் உடலில் உள்ள கோடுகள் தான். மற்ற இனப் புலிகளை விட இவற்றின் உடலில் கோடுகள் குறைவாக இருக்கும். சில புலிகளுக்கு கோடுகளுக்கு இடையே புள்ளிகளும் இருக்கும்.

நம்மூர் ஆட்களைப் போலவே பாலி மக்களுக்கும் புலி நகம், புலித் தோல் போன்றவற்றின் மீது எப்போதும் ஒரு கண் உண்டு. அவற்றுக்கு அதீத சக்தி இருப்பதாக அவர்கள் நம்பினார்கள். மேலும் புலி நகத்தை அணிந்துக் கொள்வதை பெருமையாக நினைத்தார்கள். இந்த நம்பிக்கையால் புலிகளை அநியாயத்துக்கு கொன்று குவித்தார்கள்.

அந்த சின்னஞ் சிறிய தீவில் குறைந்த எண்ணிக்கையிலேயே புலிகள் இருந்தன. அவை ஒட்டு மொத்தமாக அழிக்கப்பட்டு விட்டன. கடைசி பாலிப் புலி 1937ம் ஆண்டு கொல்லப்பட்டது.

**S.ஜானகி**


## மித்ரா டைம்ஸ் மாத இதழ்

ஆண்டு சந்தா-120

**ஆண்டு சந்தா படிவம்**




பெயர் :..........................................

முகவரி :..........................................

..........................................

..........................................

..........................................

மாநிலம் :..........................................

தொலைபேசி :..........................................

கைபேசி :..........................................

மின்னஞ்சல் :..........................................

காசோலை & டி.டி. விவரம்:

எண் :..........................................

வங்கி :..........................................தேதி..........

தொகை :..........................................

**அனுப்ப வேண்டிய முகவரி :**

மித்ரா டைம்ஸ் மாத இதழ்

#602, ஸ்ருதி பிளாக், சித்ரா அவென்யூ, 9, சூளைமேடு ஹைரோடு,

சென்னை-600 094. போன்:044-23744662, 23743007.

# இன்வர்ட்டர்

## ஒரு எச்சரிக்கை ரிப்போர்ட்!

இப்போதெல்லாம் தமிழகம் முழுவதும் இன்வர்ட்டர்கள் உபயோகிக்காதவர்கள் எண்ணிக்கை மிகக் குறைவு. அடிக்கடி கரண்ட் கட் ஆகும் சமயங்களில் உடனடியாக தானாகவே பேட்டரியில் சேமித்து வைக்கப் பட்டிருக்கும் கரண்ட்டிலிருந்து மின்விசிறி, ஒரு சில லைட்டுகள் உள்பட வேலை செய்யக் கூட இன்வர்ட்டர் உபயோகிக்கிறோம். அதுவும் கோடைக்காலம் நெருங்க நெருங்க இன்வர்ட்டரின் தேவை மிக அத்தியாவசியமாகிறது. எல்லா மின் சாதனங் களைப் போலவும் இன்வர்ட்டரிலும் ஒரு சில ஆபத்துகள் உள்ளன.

எல்லா மின் சாதனங்களை விடவும் இதில் மறைமுகமான ஆபத்து ஒன்றும் இருக்கிறது. நித்து என்பவர் இது குறித்து தனது ட்வீட்டர் பக்கத்தில் பகிர்ந்துள்ள சம்பவம் அனைவருக்கும் எச்சரிக்கையாக இருக்கும். அண்மையில் ஒருநாள்.. வீட்டில் கணவர், இரண்டு வயது மகள், எல்லோரும் அமர்ந்திருக்கையில், பள்ளி முடிந்து வந்தான் மகன். வரும் போதே வீட்டினுள் துர்நாற்றம் அடிப்பதாகப் புகார். “தெருவிலே குப்பைத்தட்டி பக்கத்துலே போகும் போது நாறுகிற மாதிரி இருக்கிறது“ என்பது மகனின் கம்ப்ளைண்ட். எங்களுக்கு ஜலதோஷம் இருந்ததால் அப்படி எதுவும் வித்தியாசம் தெரியவில்லை. இரவு தூங்கி எழுந்து காலையிலும் அதே ஆர்ப்பாட்டம் செய்தான். அன்று மாலையும் மீண்டும் அதே ஆர்ப்பாட்டம். அப்போது தான் எனக்கும் அந்த துர்நாற்றம் லேசாக நுகர முடிந்தது.

கணவரிடம் இன்வர்ட்டர் பாட்டரியின் கீழே பல்லி எதுவும் இறந்து கிடக்க வாய்ப்புண்டு. நகர்த்திப் பாருங்கள் என்று கூறினேன். சிறிது நேரத்தில் பாட்டரி அருகில் ஃபேன் ஒன்றை வைத்திருந்தார் கணவர். “பேட்டரி ஓவர் ஹீட் ஆகிவிட்டது போல. அதான் அந்த துர்நாற்றம்“ என்றார் அவர். சிறிது நேரம் கழித்து மீண்டும் அந்த அறைக்குள் நுழைந்து பார்த்தால் பேச்சு மூச்சு இல்லாமல் கணவர் மயங்கிக் கிடந்தார். முகத்தில் தண்ணீர் தெளித்தும் பயன் இல்லை. மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று சேர்த்தோம். என்ன காரணத்தினால் மயங்கி விழுந்தார் என்று மருத்துவர்கள் கேட்டதற்கு சரியான பதில் சொல்ல முடியவில்லை.

திடீரென்று பாடத்தில் படித்தது நினைவுக்கு வந்தது. பேட்டரி ஓவர் ஹீட் ஆனால் ‘ஹைடரஜன் சல்ஃபேட்’ வாயு உற்பத்தி ஆகும். அழுகிய முட்டையின் துர்நாற்றத்தை போலவே இருக்கும். அந்த வாயுவை சுவாசித்தால் கண்ணிலும், மூக்கிலும் எரிச்சலை ஏற்படுத்தும். அடுத்து நுரையீரலிலும் பரவும். இருமல் ஆரம்பிக்கும். மயக்கம் ஏற்படும்.. அடுத்த ஓரிரு மணி நேரங்களில் மரணம் என்பதெல்லாம் நான் கூகுளில் தேடிக் கண்டுபிடித்து அதிர்ந்த தகவல்கள். நுரையீரலின் அளவு பெரியவர்களுக்கு அதிகம் என்பதால், குழந்தைகளை விட இது பெரியவர்களை தான் அதிகம்




பாதிக்குமாம். மருத்துவரிடம் இதுகுறித்து கூறினேன். மருத்துவரின் தீவிர சிகிச்சையினால் சிறிது நேரத்திலேயே கணவர் நல்லபடியாக கண் விழித்தார். “பேட்டரியை நகர்த்தும் போது ஓவர் ஹீட் இருக்கிறது தெரிந்தது. அதிலேர்ந்து தான் அந்த கெட்ட நாத்தமும் வருதுன்னும் புரிஞ்சிச்சு. எல்லோரும் வெளியிலே போயிடலாமுன்னு யோசிக்கிறதுக்குள்ளே மயக்கம் வந்திடுச்சு“ என்றார் கணவர்.

சில மணி நேரங்களுக்குப் பிறகு வீடு திரும்பினோம். வீட்டுக்கு வந்து சேர்ந்தவுடன் நெஞ்சைப் பிடித்துக் கொண்டு சுமார் மூன்று நிமிடங்களுக்கு இருமத் தொடங்கினார். இப்படிப்பட்ட பாதிப்புகளுக்கு குறைந் தபட்சம் மூன்று நாட்களுக்காவது இருமல் உள்ளிட்ட பாதிப்புகள் இருக்கும் என்று கூகுளில் தேடியதில் தகவல் கிடைத்தது. ஆனாலும் மூன்று நாட்களுக்குப் பிறகும் இருமல் தொடர்ந்து கொண்டே இருந்தது. இப்போது அதற்கான மருந்துகளை கணவர் எடுத்துக் கொண்டிருக்கிறார்.

இந்த அதிர்ச்சித் தகவல் குறித்த செய்தியை பகிர்ந்த போது இன்வர்ட்டர் விற்பனையாளர் ஒருவர் கூறிய சில அட்வைஸ்கள் : எந்தவொரு மின் பொருள் என்றாலும் அதனை முறையாகப் பராமரிக்க வேண்டும். இன்வர்ட்டர் வாங்கும் போது அது ஒழுங்கான நிறுவனத்துடையதா என்பதையெல்லாம் பார்க்க வேண்டும். தரமற்ற சீனத் தயாரிப்புகள் எல்லாம் மார்க்கெட்டில் சல்லிசான விலையில் கிடைக்கின்றன. அவற்றையெல்லாம் வாங்கினால் சமயங்களில் ஓவர் ஹீட்டில் பேட்டரி வெடித்துச் சிதறும் வாய்ப்பெல்லாம் கூட உண்டு. காற்றோட்டமான இடத்தில் இன்வர்ட்டர், பேட்டரிகளை வைக்க வேண்டும். பேட்டரிகளை முழுக்க மூடி வைக்கக் கூடாது. மூன்று மாதத்திற்கு ஒரு முறையாவது இன்வர்ட்டரில் தண்ணீர் இருக்கிறதா, ஒழுங்காக வேலை செய்கிறதா என்பதை முறையாக பயிற்சி பெற்ற நபரை வைத்து பார்த்துக் கொள்ள வேண்டும்.

கோடைக் காலங்களில் தொடர்ந்து எந்நேரமும் இன்வர்ட்டர் பயன்பாட்டிலேயே இருக்கும் சமயங்களில் நடுவில் குறைந்தபட்சம் அரை மணி நேரமாவது அவ்வப்போது ஆஃப் செய்து வைப்பதும் நல்லது.

**R.ராம்மோகன்**

### ஓவியம் வரைந்தவர்




**எஸ்.ஜானகி**

**VIII-B**

**GOOD SHEPHERD**

MATRICULATION HIGHER SECONDARY SCHOOL





# பெண்களைக் குறிவைக்கும் தைராய்டு

இன்றைய தினம் இளம் பெண்களை அதிகமாகப் பாதிக்கிற ஹார்மோன் பிரச்னைகளில் தைராய்டு ஹார்மோன் பிரச்னை முன்னிலை வகிக்கிறது. தொண்டையில் மூச்சுக்குழாய்க்கு முன்பாக, குரல்வளையைச் சுற்றி, இரு பக்கமும் படர்ந்து, ஒரு பட்டாம்பூச்சி வடிவத்தில் அமைந்துள்ளது தைராய்டு சுரப்பி.

இது சாதாரணமாக நம் கண்ணுக்குத் தெரியாது. இதன் இயல்பான எடை 12லிருந்து 20 கிராம் வரை இருக்கும். இந்த எடைக்கு மேல் அதிகமானால், தைராய்டு சுரப்பி வீங்கியுள்ளது என்று பொருள். அப்போது நோயாளியானவர் உணவை விழுங்கும்போது, குரல்வளையோடு தைராய்டும் சேர்த்து மேலே தூக்கப் படுவதைப் பார்க்க முடியும்.

கழுத்தில் மூச்சுக் குழலின் கீழே காணப்படும் தைய்ராய்டு சுரப்பிகள் உற்பத்தி செய்யும் ஹார்மோன்கள் மனித உடலின் இயக்கத்தில் பெரும் பங்கு வகிக்கிறது. அயோடின் ஏற்ற இறக்கம் இந்த சுரப்பிகளின் செயல்பாட்டை பாதிக்கிறது. இதனால் தைராய்ட் நோய் ஏற்படுகிறது.

அயோடின் ஏற்ற இறக்கம் இந்த சுரப்பிகளின் செயல்பாட்டை பாதிக்கிறது. இதனால் தைராய்ட் நோய் ஏற்படுகிறது.

தைராய்ட் குறைபாடு காரணமாய் பெண்கள் பருவமடையும் வயது தள்ளிப் போக நேரிடலாம் குறைந்த வயதிலேயே வயதுக்கு வருவதும் உண்டாகலாம் என மருத்துவர்கள் கூறுகின்றனர்.

சில பெண்கள் கருத்தரிக்க முடியாமல் போவதற்கும் தைராய்ட் பிரச்சினை காரண மாகி விடுவதுண்டு. அவர்களை மகப்பேறு நிபுணர்கள் முதலில் சோதிப்பது தைராய்ட் இருக்கிறதா என்பது தான். 40 வயதுக்கு மேற்பட்ட பெண்களில் 5 சதவீதம் இந்தக் கோளாறினால் அவதியுறுகின்றனர். இந்த சுரப்பிகள் ஹார்மோனைக் குறைவாக சுரந்தால் கொழுப்பு சக்தி அதிகமாகி விடும் இதனால் இதயம் பாதிக்கப்பட்டு மாரடைப்பு ஏற்படும் சூழ்நிலையும் உருவாகலாம்.

ஹைப்போ தைராய்டிசன், ஹைப்பர் தைராயிடிசன், தைராய்ட் கட்டிகள் ஹார்மோன் சுரப்பி இன்மை ஆகியவை தான் தைராய்டைப் பொறுத்தவரைக்கும் ஏற்படும் முக்கிய பிரச்சினைகள் ஆகும்.

சுரப்பியின் செயல்பாடு அதிகமாகி அதனால் ஹார்மோன் உற்பத்தி அதிகம் அடைவது முதல் வகையின் குணங்கள் (ஹைப்போ தைராய்டிசன்). வயது வித்தியாசம் பொறுத்து இதன் அறிகுறிகள் மாறும் சிறுவயதில் அளவுக்கு அதிக உயரம் பருமன் இவைகள் இந்த நோயின் அறிகுறிகள்.

அடுத்தது (ஹைப்பர் தைராயிடிசன்) இதில் வயதானவர்களின் எடைக் குறைவு, அதிக வியர்வை, உடல் நடுக்கம் போன்றவை இதன் அறிகுறிகள். தைராய்ட் மருந்துகளும், ரேடியோ ஆக்டிவ் அயோடினும் இதற்குரிய மருந்துகளில் முக்கியமானவைகள் என்கிறார்கள் மருத்துவர்கள். முடியாத பட்சத்தில் அறுவை சிகிச்சை தேவைப்படும்.

50 வயதை கடந்தவர்களுக்கு நினைவாற்றல் குறைவது ஹைப்போ தைராய்ட் பிரச்சினையால் தான். சோர்வு, கவலை என மனநோயாளி போல் ஆகிவிடுவார்கள். மாத்திரைகளை தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் இது விலகி விடும்.


கழுத்தில் கட்டிகள் வந்து வீக்கம் ஏற்படுவது சுற்றுச்சூழல், பரம்பரை என இரு காரணங்களினால் வருகிறது. இதுவும் அயோடின் குறைபாடு தான் முட்டை கோஸ், கேரட் அதிகமாக சேர்க்கக் கூடாது. இது தைராய்ட் பிரச்சினையை அதிகப்படுத்தும். மலையோரப் பகுதிகளில் வசிப்பவர்களுக்கு கட்டிகள் அதிகம் வரும். இவர்களின் உணவிலும் தண்ணீரிலும் அயோடின் குறைவாக இருப்பது தான் காரணம். அயோடின் கலந்த உப்பை பயன்படுத்த வேண்டும் .

தைராய்ட் கட்டிகள் அறுவை சிகிச்சை மூலமாய் குணப்படுத்தலாம். மேலும் லேசர் சிகிச்சை இருக்கிறது.

தைராய்ட் கட்டிகளில் சில புற்று நோய் பாதிப்புக்குள்ளாகும். ஆனால் அது மிகவும் அபூர்வமாகவே வரும். இதனை FNAC-(Fine Needle Aspiration Citation) மூலம் கண்டு பிடிக்கலாம்.

டென்ஷன் காரணமாய் தைராய்ட் பிரச்சினைகள் வருகிறதென சொல் கிறார்கள் சிலர். சில குழந்தைகள் பிறக்கும் போதே இந்தக் குறைபாட்டுடன் பிறப்பதுண்டு.

ஆனாலும் இந்நோய் ஆண்களை விடப் பெண்களை 7 மடங்கு அதிகமாய் தாக்குகிறது. எனவே பெண்கள் இது விஷயத்தில் கவனம் செலுத்த வேண்டும்.




பச்சைக்காய்கறிகள், பழங்கள், கீரைகள் ஆகியவற்றை தினசரி உணவில் சேர்ப்பதும், உடற் பயிற்சி செய்வதும், இந்த நோயினின்றும் பாதுகாக்கும் முறைகள்.

எனக்கும் தைராய்டு பிரச்சனை இருந்தது. அன்றாட உணவில் ஊட்டச சத்து மிகுந்த காய்கறிகள், பழங்களை எடுத்துக் கொள்கிறேன். மேலும் உடற் பயிற்சியும் செய்து வருகிறேன். நல்ல பலன் கிடைத்துள்ளது.

-சுஜாதா மூர்த்தி

# கல்வி முறையில் ஒரு புரட்சி

## விரைவில் தமிழ்நாட்டில்

உலகில் தலைசிறந்த கல்வியில் பின்லாந்து முதல் இடத்தில் உள்ளது அப்படி என்னதான் இருக்கிறது பின்லாந்து கல்வி முறையில் ?பின்லாந்தில் ஏழு வயதில்தான் ஒரு குழந்தை பள்ளிக்குச் செல்லத் தொடங்குகிறது..ஒன்றரை வயதில் ப்ளே ஸ்கூல்.., இரண்டரை வயதில் ப்ரீ கே.ஜி., மூன்று வயதில் எல்.கே.ஜி., நான்கு வயதில் யு.கே.ஜி என்ற சித்ரவதை அங்கே இல்லை...

கருவறையில் இருந்து வெளியில் வந்ததுமே குடுகுடுவென ஓடிச்சென்று பள்ளியில் உட்கார்ந்து கொள்ளும் எந்த அவசரமும் அவர்களுக்கு இல்லை..எல்லா நேரமும் கற்றலுக்கான துடிப்புடன் இயங்கும் குழந்தையின் சின்னஞ்சிறு மூளை, தனது சுற்றத்தின் ஒவ்வோர் அசைவில் இருந்தும் ஒவ்வோர் ஒலியில் இருந்தும் கற்கிறது. இலை உதிர்வதும், செடி துளிர்ப் பதும், இசை ஒலிப்பதும், பறவை பறப்பதும் குழந்தைக்குக் கல்விதான். இவற்றில் இருந்து வேரோடு பிடுங்கி வகுப்பறைக்குள் நடுவதால், அறிவு அதிவேக வளர்ச்சி அடையும் என எண்ணுவது மூடநம்பிக்கை.

ஏழு வயதில் பள்ளிக்குச் செல்லும் பின்லாந்து குழந்தை, அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு கிட்டத்தட்ட ஆண்டின் பாதி நாட்கள்தான் பள்ளிக்கூடம் செல்கிறது. மீதி நாட்கள் விடுமுறை. ஒவ்வொரு நாளும் பள்ளி இயங்கும் நேரமும் குறைவு தான். அந்த நேரத்திலும் கூட, படிப்புக்குக் கொடுக்கப்படும் அதே முக்கியத்துவம் இசை, ஓவியம், விளையாட்டு, மற்றும் பிற கலைகளுக்கும் முக்கியத்துவம் உண்டு. ஒவ்வொரு பள்ளியிலும் ஓர் ஒவ்வறை இருக்கும். படிக்கப் பிடிக்க வில்லை அல்லது சோர் வாக இருக்கிறது என்றால், மாணவர்கள் அங்கு சென்று ஓய்வு எடுக்கலாம்.





முக்கியமாக, 13 வயது வரை ரேங்கிங் என்ற தரம் பிரிக்கும் கலாச்சாரம் கிடையாது. பிராக்ரசு ரிப்போர்ட் தந்து பெற்றோரிடம் கையெழுத்து வாங்கி வரச் சொல்லும் வன்முறை கிடையாது. தங்கள் பிள்ளையின் கற்றல் திறன் குறித்து தெரிந்துகொள்ள வேண்டும் என பெற்றோர்கள் விரும்பினால், தனிப்பட்ட முறையில் விண்ணப்பித்துப் பெற்றுக்கொள்ளலாம். கற்றலில் போட்டி கிடையாது என்பதால், தேர்வுகளில் அதிக மதிப்பெண் எடுக்கும் மன உளைச்சல்கள் மாணவர்களுக்கு இல்லை. சக மாணவர்களைப் போட்டியாளர்களாகக் கருதும் மனப்பாங்கும் இல்லை. இவர்களுக்கு வீட்டுப்பாடம் தரப்படுவது இல்லை. மாணவர்களுக்கு எந்தப் பாடம் பிடிக்கிறதோ அதில் இருந்து அவர்களே வீட்டுப்பாடம் செய்து வரலாம். ஒவ்வொரு பள்ளியிலும் ஒரு மருத்துவர் இருப்பார். அவர், மாணவர்களின் உடல்நிலையை தனிப்பட்ட முறையில் கவனித்து ஆலோசனைகள் வழங்குவார். ஒரு பள்ளியில் அதிகபட்சமாக 600 மாணவர்கள் இருக்கலாம்; அதற்கு அதிக எண்ணிக்கை கூடவே கூடாது. முக்கியமாக பின்லாந்தில் தனியார் பள்ளிக்கூடமே கிடையாது. அங்கு கல்வி என்பது முழுக்க முழுக்க அரசின் வசம்...

> **பின்லாந்து கல்வி முறையை தமிழ்நாட்டில் எங்கள் மித்ரா குருப் ஆப் நிறுவனம் தொடங்க உள்ளது. இதற்கு Educational Directors , Educators அனைவரும் இணைந்து முதலில் கோவையிலும் அடுத்தகட்டமாக சென்னையிலும் தொடங்குவதற்கு முயற்சியெடுத்து வருகின்றோம். கூடிய விரைவில் பின்லாந்து கல்வி தமிழ்நாட்டிலும் சாத்தியமே.**

கோடீசுவரராக இருந்தாலும், நடுத்தர வர்க்கத்தினராக இருந்தாலும், ஏழையாக இருந்தாலும் அனைவரின் குழந்தைகளும் ஒரே பள்ளியில்தான் படிக்க வேண்டும். என் பொண்ணு இன்டர்நேசுனல் சுகூல்ல படிக்கிறா' என சீன் போட முடியாது.

அனைவருக்கும் சம தரமுள்ள கல்வி என்ற உத்தரவாதம் உள்ளது. அதனால்தான் பின்லாந்தில் 99 சதவிகிதம் குழந்தைகள் ஆரம்பக் கல்வியைப் பெற்றுவிடுகின்றனர். அதில் 94 சதவிகிதம் பேர் உயர்கல்விக்குச் செல் கின்றனர்.'டியூஷன்'என்ற அருவருப்பான கலாசாரம், அந்த நாட்டுக்கு அறிமுகமே இல்லை. தேர்வுகளை அடிப்படை முறைகளாக இல்லாத இந்தக் கல்வி முறையில் பயின்றுவரும் மாணவர்கள்தான், உலகளாவிய அளவில் நடைபெறும் பல்வேறு தேர்வுகளில் முதல் இடங்களைப் பிடிக்கின்றனர்...

"இது எப்படி?" என்பது கல்வியாளர் களுக்கே புரியாத புதிர். அந்தப் புதிருக்கான விடையை, ஐ.நா சபையின் ஆய்வு முடிவு அவிழ்த்தது. உலகிலேயே மகிழ்ச்சியாக இருக்கும் குழந்தைகள் பற்றிய தரவரிசை ஆய்வு ஒன்றை, ஐக்கிய நாடுகள் சபை ஒவ்வோர் ஆண்டும் வெளியிடுகிறது. இதில் பின்லாந்து எப்போதும் முன்னணியில் இருக்கிறது. மகிழ்ச்சியின் நறுமணத்தில் திளைக்கும் குழந்தைகள், அறிவை ஆர்வத்துடன் சுவைப்பதில் புதிர் எதுவும் இல்லை. பின்லாந்து கல்வி முறையின் இத்தகைய சிறப்புகள் குறித்து அறிந்து வருவதற்காக, உலகமெங்கும் உள்ள கல்வியாளர்களும், பிரதிநிதிகளும் அந்த நாட்டை நோக்கிக் குவிகின்றனர். உலகின் 56 நாடுகளில் இருந்து 15,000 பிரதிநிதிகள் ஒவ்வோர் ஆண்டும் செல்கின்றனர். நாட்டின் அந்நியச் செலாவணியில்



கணிசமான சதவிகிதம் கல்விச் சுற்றுலாவின் மூலமே வருகிறது...

ஆனால், இப்படி தங்களை நோக்கி வீசப்படும் புகழ்மாலைகளை பின்லாந்தின் கல்வியாளர்களும் அமைச்சர்களும் ஓடோடி வந்து ஏந்திக்கொள்வது இல்லை. அதற்கு அவர்கள் சொல்லும் காரணம், "பின்லாந்து கல்வி முறைதான் (Finnish Education system) உலகிலேயே சிறந்தது எனச் சொல்ல முடியாது... ஏனெனில் "OCED" அமைப்பின் ஆய்வில் எல்லா உலக நாடுகளும் பங்கேற்காத நிலையில் இப்படி ஒரு முடிவை ஏற்றுக் கொள்ள முடியாது. எங்களைவிட சிறந்த கல்விமுறையும் இருக்க வாய்ப்பு உள்ளது" என்கிறார்கள். இல்லாத நாற்காலியைத் தேடி எடுத்து ஏறி அமர்ந்து, தனக்குத்தானே முடிசூட்டிக்கொள்ளும் தற்பெருமையாளர் கள் நிறைந்த உலகத்தில் இது பண்புமிக்க பார்வை. மதிக்கத்தக்க மனநிலை.

பின்லாந்தில் ஆசிரியர் பணி என்பது, நம் ஊர் ஐ.ஏ.எஸ் ., ஐ.பி.எஸ் போல மிகுந்த சமூகக் கௌரவம் உடையது. அரசின் கொள்கை வகுக்கும் முடிவுகளில், திட்டங் களின் செயலாக்கத்தில் ஆசிரியர்களுக்கு முக்கியப் பங்கு உண்டு. மூன்றில் ஒரு பின்லாந்து குழந்தைக்கு, ஆசிரியர் ஆவதுதான் தன் வாழ் நாள் லட்சியம்.. அதே நேரம் அங்கு ஆசிரியர் ஆவது அத்தனை சுலபம் அல்ல!.. மேல்நிலை வகுப்பில் சிறந்து விளங்கும் மாணவர்களில் இருந்து ஆசிரியர் பயிற்சிக்கு மாணவர்கள் தேர்வு செய்யப்படுகின்றனர்...

ஐந்து ஆண்டுகள் உண்டு, உறைவிடப் பள்ளிகளில் சேர்ந்து கடும் பயிற்சி எடுக்க வேண்டும். பிறகு, ஆறு மாத காலம் ராணுவப் பயிற்சி. ஒரு வருடத்துக்கு வெவ்வேறு பள்ளிகளில் நேரடியாக வகுப்பறையில் ஆசிரியர் பயிற்சி. ஏதாவது ஒரு பாடத்தில் புராசெக்ட். குழந்தை உரிமைப் பயிலரங்கங்களில் பங்கேற்பது. நாட்டின் சட்டத் திட்டங்கள் குறித்த தெளிவுக்காக தேசிய அமைப்புகளிடம் இருந்து சான்றிதழ். தீயணைப்பு, தற்காப்புப் பயிற்சி, முதலுதவி செய்வதற்கான மருத்துவச் சான்று என ஆசிரியர் பயிற்சிக்கு சுமார் ஏழு வருடங்களைச் செலவிட வேண்டும்...

இப்படி ஆசிரியர்களை உருவாக்கும் விதத்தில் பின்லாந்து மேற்கொள்ளும் சமரசம் இல்லாத முயற்சிகள்தான், அங்கு கல்வியில் மாபெரும் மறுமலர்ச்சியை உருவாக்கி இருக்கிறது!. இப்போது நாம் அனைவரும் சிந்திக்க வேண்டிய தருணம் இது. பெற்றோர்கள், கல்வியாளர்கள், கல்வி நிறுவனங்கள், ஆட்சியாளர்கள் அனைவரும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டிய நேரம் இது. குழந்தைகள் வளர்ப்பில் நாம் தான் கற்றுக் கொள்ள வேண்டியது அதிகம் இருக்கிறது. பின்லாந்தின் கல்விமுறையிலிருந்து நாம் கற்றுக் கொண்டு மாறுவோம்!.

பின்லாந்து கல்வி முறையை தமிழ்நாட்டில் எங்கள் மித்ரா குருப் ஆப் நிறுவனம் தொடங்க உள்ளது. இதற்கு Educational Directors , Educators அனைவரும் இணைந்து முதலில் கோவையிலும் அடுத்தகட்டமாக சென்னையிலும் தொடங்குவதற்கு முயற்சியெடுத்து வருகின்றோம். கூடிய விரைவில் பின்லாந்து கல்வி தமிழ்நாட்டிலும் சாத்தியமே.

**M.S.மூர்த்தி**





# துளசியின் மகிமை

கல்லீரலில் பிரச்சினை உள்ளவர் களுக்கு தண்ணீர் உணவு எது சாப்பிட்டாலும் வாந்தி வரும். இவர் களுக்கு கல்லீரலில் பாதிப்பு ஏற்பட்டு இருக்கிறது என்று அறிந்துகொள்ள வேண்டும். கல்லீரல் பாதிப்புக்கு இயற்கை மருத்துவத்தில் நல்ல மருந்துகள் உள்ளன. கல்லீரலை வலுவூட்டி சீராக செயல்பட வைப்பது மாதுளை. அதேபோன்று துளசியும் நல்ல மருந்து. துளசி இலை, ஏலக்காய், சுக்கு சேர்த்து நசுக்கி 1 தம்ளர் நீரில் கலந்து காய்ச்சி,அரை தம்ளராக வடிகட்டி தேவையானால் சிறிது பால், தேன் கலந்து பருகிவர உடலுக்கு எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும். கல்லீரல் பாதிப்புகள் அகலும். துளசி கஷாயம், ஆஸ்துமா வராமலும், வளர விடாமலும் தடுக்கும். கல்லீரல் மண்ணீரலில் கோளாறுகள் ஏதேனும் இருந்தால், துளசியை இரவில் ஊறவைத்து, காலையில் அதை வடிகட்டி அந்த நீரை மட்டும் சாப்பிட்டு வாருங்கள். தொடர்ந்து சாப்பிட்டால் ஈரல் கோளாறுகள் எல்லாம் இருந்த இடம் தெரியாமல் மறைந்து விடும். வாரம் ஒருநாள் கீழாநெல்லி, கரிசலாங்கண்ணி, கொத்தமல்லி ஆகிய 3 கீரைகளையும் நெய், சீரகம், பாசிப்பருப்புடன் சமையல் செய்து பகல் உணவில் சாப்பிட்டு வர கல்லீரல் சேதமடையாமல் வலிமையுடன் செயல்படும். கல்லீரலைச் சார்ந்து செயல்படும் மண்ணீரல் கணையம், சிறுநீரகம் ஆகிய உறுப்புகளும் நஞ்சுமயம் ஆகாமல், சிதைவின்றி ஊக்கமாகச் செயல்படும். குறிப்பாக புகை, மது, இரவு கண் விழிப்பு, அதிக காரம், அதிக காபி பழக்கமுள்ளவர்களுக்கு வரக்கூடிய கல்லீரல் அழற்சி, கல்லீரல் சிதைவு ஆகியவை வராமல் தடுக்கும்.


**மித்ரா டைம்ஸ்** மாத இதழ்


**விளம்பரக் கட்டணம்.**

| | | |
|---|---|---|
| பின் அட்டை கலர் | - | ரூ. 15,000 |
| உள் அட்டை கலர் | - | ரூ. 10,000 |
| முழு பக்கம் கருப்பு வெள்ளை | - | ரூ. 7,000 |
| அரை பக்கம் கருப்பு வெள்ளை | - | ரூ. 3,500 |
| கால் பக்கம் கருப்பு வெள்ளை | - | ரூ. 2,000 |

# 602, ஸ்ருதி பிளாக், சித்ரா அவென்யூ,
9, சூளைமேடு ஹைரோடு, சென்னை - 600 094.

தொடர்புக்கு
044-23743007
044-23744662

# சினிமா



## 'எந்திரன்-2 ரூ.330 கோடிக்கு காப்பீடு

இந்திய திரை உலகில் அதிகபட்ச காப்பீட்டு வசதி பெற்ற படம் என்ற பெருமையை இது பெறுகிறது.

இந்தியாவில் திரைப்படத்திற்கு காப்பீடு செய்யும் வழக்கத்தை பிரபல இயக்குனர் மற்றும் தயாரிப்பாளர் சுபாஷ் கய் ஆரம்பித்து வைத்தார். 1999ஆம் ஆண்டில் ரிலீஸ் ஆன அவரது 'டால்' படம் முதல் முறையாக காப்பீடு செய்யப்பட்டது.

ஷங்கர் இயக்கத்தில் ரஜினி கதாநாயகனாக நடிக்க 'எந்திரன் 2' மிக பிரமாண்டமாக தயாராகி வருகிறது. இதில் ரஜினி ஜோடியாக எமி ஜாக்சன் நடிக்கிறார். பிரபல இந்தி நடிகர் அக்ஷய் குமார் வில்லன் பாத்திரம் ஏற்றுள்ளார்.

பொதுத்துறை நிறுவனங்களான நியூ இந்தியா அஷ்யூரன்ஸ், ஓரியண்டல் இன்ஷூரன்ஸ் மற்றும் யுனைடெட் இந்தியா இன்ஷூரன்ஸ் ஆகிய நிறுவனங்கள் 'எந்திரன் 2' தயாரிப்பிற்கான காப்பீட்டு வசதியை அளித்திருக்கின்றன.

## ரசிகர்களுக்கு அதிர்ச்சி கொடுத்த விஜய்



விஜய் நடிப்பில் தற்போது வெளிவர உள்ள படம் 'தெறி'. இப்படத்தின் இசை வெளியீட்டு விழா நடைபெற்றது. இதில் விஜய், இயக்குனர் அட்லி, இசையமைப்பாளர் ஜி.வி.பிரகாஷ் உள்ளிட்ட படக்குழுவினர் கலந்துக் கொள்ள இருக்கின்றனர். இந்நிலையில், நள்ளிரவு இப்படத்தில் இடம் பெறும் 'ஜித்து ஜில்லாடி....' என்னும் பாடலின் வரிகள் வீடியோவை இணைய தளத்தில் விஜய் வெளியிட்டார்.

இது ரசிகர்களிடையே ஏகோபித்த வரவேற்பை பெற்று வரும் நிலையில், படத்தில் இடம் பெறும் மற்ற பாடல்களான 'என் ஜீவன்...', 'ஈனாமீனாடீகா...' விஜய் பாடிய 'செல்லாகுட்டி....', 'ராங்கு...' ஆகிய பாடல்களின் வரிகள் வீடியோவை அடுத்தடுத்து வெளியிட்டுள்ளார் விஜய். இது ரசிகர்களை இன்ப அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. தற்போது இணைய தளத்தில் இந்த பாடல்களை கேட்டு ரசிகர்கள் கொண்டாடி வருகின்றனர். இப்படத்தில் விஜய்க்கு ஜோடியாக சமந்தா மற்றும் எமி ஜாக்சன் நடித்துள்ளார்கள். விஜய் இப்படத்தில் போலீஸ் அதிகாரியாக நடித்துள்ளார். கலைப்புலி தாணு இப்படத்தை பிரம்மாண்டமாக தயாரித்துள்ளார்.





## ஆண்ட்ரியாவின் கோபம்

பொது நிகழ்ச்சிகளில் ஆண்ட்ரியா பங்கேற்பது குறைவு. தான் நடிக்கும் பட புரமோஷன் அல்லது தனது சொந்த ஆடியோ ஆல்ப வெளியீடு நிகழ்ச்சிகளில் மட்டுமே பங்கேற்பதுண்டு. நெருக்கமான நண்பர்களுடன் சில சமயம் பார்ட்டியில் பங்கேற்கிறார். இளைஞர்கள் சிலரின் சக்சஸ் நிகழ்ச்சி ஒன்றில் சமீபத்தில் பங்கேற்றார் ஆண்ட்ரியா. சிக் உடையில் வந்திருந்த தன்னை போட்டோ எடுக்க புகைப் படக்காரர்கள் முயன்றபோது அவர்களை தடுத்தார் ஆண்ட்ரியா. 'என்னை யாரும் போட்டோ எடுக்காதீர்கள் எல்லோரும் விலகிப்போங்கள்' என்று சத்தம் போட்டார். எதற்காக கோபப்படுகிறார் என்று தெரியாமல் போட்டோகிராபர்கள் வெறுப்படைந்தனர். இந்த சம்பவத்தால் நிகழ்ச்சியில் பங்கேற்ற விருந்தினர்கள் தர்ம சங்கடத்துக்கு ஆளாகினார்கள்.

## அமலாபால் கணக்கு



தனுஷ் தயாரித்து இருக்கும் படம், 'அம்மா கணக்கு'. இந்தியில் உருவான 'நில் பட்டே சன்னட்டா' படத்தின் ரீமேக்கான இது தமிழ், இந்தியில் ஒரே நேரத்தில் வெளியாக இருக்கிறது. இதில் அமலா பால், ரேவதி உட்பட பலர் நடித்து இருக்கின்றனர். அஸ்வினி ஐயர் திவாரி இயக்கியுள்ளார். படம் பற்றி அமலா பால் கூறியதாவது:இதில் 13 வயது பெண்ணுக்கு அம்மாவாக நடித்துள்ளேன். வீட்டு வேலை உட்பட பல்வேறு வேலை செய்து குடும்பத்தைக் காப்பாற்றும் பெண்ணாக நடித்துள்ளேன். இதுவரை நடித்த படங்களில், இதில் நடித்தபோதுதான் மனதுக்கு மிக மகிழ்ச்சியாக இருந்தது. அப்படியொரு கேரக்டர் இது. அம்மா, மகளுக்கான உறவு மற்றும் மனதிலுள்ள சிக்கல்களைப் பேசும் படம் இது. அம்மா என்றால், வயதான அம்மா இல்லை. இளம் வயது அம்மா வேடம். இந்த கேரக்டரில் நான் மிகவும் விரும்பித்தான் நடித்தேன். இதில் நடிப்பதற்காக 5 கிலோ வரை உடல் எடையை ஏற்றினேன். இந்திப் பதிப்பில் என் கேரக்டரில் ஸ்வரா பாஸ்கர் நடித்து இருந்தார். வெளிநாட்டில் நடந்த பட விழாவில், அவரின் நடிப்புக்கு விருது கிடைத்தது. எனக்கும் கிடைக்குமா என்பது பற்றி தெரியாது. ஆனால், நல்ல படத்தில் நடித்து இருக்கிறேன் என்ற திருப்தி இருக்கிறது. அது ஒன்றே போதும். தயாரிப்பாளர் தனுஷ் மீது மரியாதை அதிகரித்து இருக்கிறது. 'காக்கா முட்டை', 'அம்மா கணக்கு', 'வட சென்னை' மாதிரியான தரமான படங்களைத் தயாரிக்க ரசனை வேண்டும். அதை தனுஷ் செய்வதில் மகிழ்ச்சி என்று அமலா பால் கூறினார்.

# முதல் உலகப் போர்

*1914-1918*



இதிகாச காலத்திலும் வரலாற்றுக் காலத்திலும் பல போர்கள் நடந்திருக் கின்றன. எனினும் உலக நாடுகள் இரண்டு அணிகளாகப் புரிந்து விமானங்களையும் போர்க் கப்பல்களையும் நவீன ஆயுதங்களையும் பயன் படுத்திப்போரில் ஈடு பட்டது 1914ம் ஆண்டு முதல் 1918 ம் ஆண்டு வரை நடைபெற்றது முதலாம் உலகப் போரில் தான்.

**போருக்கு காரணம்:**

ஆஸ்திரியா நாட்டுப் பட்டத்து இளவரசரான பிரான்சிஸ் பெர்டினாந்தும் அவருடைய மனைவியும் காரில் சென்றபோது (1014) ஜூன் 28ந் தேதி) சுட்டுக்கொல்லப்பட்டனர் சுட்டவன் செர்பியா நாட்டை சேர்ந்தவன். இதன் காரணமாக செர்பியா மீது ஆஸ்திரியா படையெடுத்தது.

நாடு பிடிக்கும் ஆசையில் ஜெர்மனி ஆஸ்திரியாவுக்கு ஆதரவாகப் போரில் குதித்தது. ஹங்கேரி துருக்கி, பல்கேரியா ஆகிய நாடுகளும் ஜெர்மனியுடன் சேர்ந்து கொண்டன.

செர்பியாவுக்கு ஆதரவாக பிரிட்டன், பிரான்ஸ், ரஷ்யா, இத்தாலி, ஜப்பான், சீனா ஆகியவை போரில் ஈடுபட்டன.

1914 ஆகஸ்ட் 4ந் தேதி முதலாம் உலகப் போர் மூண்டது. ஆரம்பத்தில் அமெரிக்கா நடுநிலை வகித்தது. ஆயினும், பிரான்ஸ், பிரிட்டன், ஆகிய நாடுகளுக்கு உதவி செய்தது. அதனால் ஆத்திரம் அடைந்த ஜெர்மனி, அமெரிக்கக் கப்பல்கள் மீது குண்டு வீசியது. கப்பல்கள் கடலில் மூழ்கின. இதன் காரணமாக ஜெர்மனிக்கு எதிராக அமெரிக்கா போரில் குதித்தது.

இரு தரப்பினருக்கும் இடையே தரையிலும், கடலிலும் பயங்கரப் போர்கள் நடந்தன. நீர்மூழ்கி கப்பல்களையும் போர் விமானங்களையும் ஜெர்மனி அதிக அளவில் பயன்படுத்தி, நேச நாடுகளுக்கு கடும் சேதத்தை உண்டாக்கியது.

நேச நாடுகள், டாங்கிப் படைகளை அதிகமாக பயன்படுத்தின.

**ரஷியா விலகல்**

போர் முடிந்து கொண்டிருந்த போதே, ரஷியாவில் புரட்சி மூண்டு, லெனின் தலைமையில் உலகின் முதலாவது கம்யூனிச அரசு உதயமாகியது.

லெனின் அரசு 1917ம் ஆண்டின் பிற்பகுதியில் ஜெர்மனியுடன் சமாதான ஒப்பந்தம் செய்து கொண்டு போரில் இருந்து விலகிக் கொண்டது.

இந்தப் போரில், ஜெர்மனி படைகள் விஷ வாயுவைப் பயன்படுத்தின. போர்க்களத்திற்கு வரும் ஜெர்மனி வீரர்கள் முகமூடி அணிந்திருப்பார்கள். அவர்களுக்குப் பின்னால் வரும் குதிரை வண்டிகளில் விஷப்புகை நிரப்பப்பட்ட சிலிண்டர்கள் வரும் எதிரிப் படைகளை நெருங்கியதும், சிலிண்டர்களின் வாய் உடைக்கப்படும். அவற்றிலிருந்து விஷவாயு வெளியேறும். அதைச் சுவாசிக்கும் எதிரிப் படையினர் மயங்கி விழுந்து மரணம் அடைவார்கள். போரில் விஷப் புகையைப் பயன்படுத்தக் கூடாது என்று எல்லா நாடுகளும் ஒப்புக் கொண்டிருந்தன. ஆனால் அதை மீறி ஜெர்மனி விஷப் புகையைப் பயன்படுத்தியது.

ஆரம்பத்தில் ஜெர்மனிக்கு வெற்றிகள் கிடைத்தன. முடிவில் பிரிட்டன், பிரான்ஸ், அமெரிக்கா ஆகிய மூன்று நாடுகளின் படைகளும் ஜெர்மனியை நோக்கி விரைந்தன. இதன் காரணமாக ஜெர்மனி மக்கள் பீதி அடைந்து மன்னர் கெய்சருக்கு எதிராகக் கலகத்தில் ஈடுபட்டனர். மக்களை அடக்க ராணுவத்தை செய்சர் ஏவினார். உலகப் போரில் ஈடுபட்டிருந்த ஜெர்மனிய படைகள் சொந்த மக்களைச் சுட்டு கொல்லும் நிலை ஏற்பட்டது.

**ஜெர்மனி சரண்:**

நேச நாடுகளின் படைகள்



ஜெர்மனி தலைநகரான பெர்லின் நகருக்குள் நுழைந்தன. இந்தப் பெரும் படைகளின் தாக்கு தலை ஜெர்மனிய படைகளால் தாக்குப் பிடிக்க முடியவில்லை சிறிது நேரத்தில் ஜெர்மனி சரண் அடைந்தது.

ஜெர்மனிய மன்னர் கெய்சர் முடி துறந்தார். ஆட்சியை மக்கள் பிரதிநிதிகளிடம் ஒப்படைத்து விட்டு நாட்டை விட்டு வெளியேறினார்.

**சேதம்:**

1,561 நாட்கள் நடைபெற்ற இந்த போட்டியில் 2 கோடிப் பேர் மாண்டனர். யுத்தம் முடிந்த பிறகு உலகம் முழுவதும் பரவிய விஷக் காய்ச்சலால் 2 கோடி மக்கள் உயிர் இழந்தார்கள். 40 லட்சம் கோடி டாலர் மதிப்புள்ள சொத்துக்கள் நாசம் அடைந்தன.

**நஷ்ட ஈடு:**

போரில் ஈடுபட்ட நாடுகள் இடையே 1919 ஜூன் 28ம் தேதி ஒரு உடன்படிக்கை ஏற்பட்டது. அதன்படி படை திரட்டும் உரிமையை ஜெர்மனி இழந்தது போரில் பங்கு கொண்ட நேச நாடுகளுக்கு ஜெர்மனி நஷ்டஈடு கொடுக்க வேண்டும் என்று முடிவாயிற்று.

ஜெர்மனியின் வளமான பகுதிகள் சிலவற்றை பிரான்ஸ் கைப்பற்றிக் கொண்டது.

**சிதறியது:**

ஆஸ்திரியா நாடு, பல்வேறு இன மக்களைக் கொண்ட நாடாகும். போருக்குப் பிறகு ஆஸ்திரியா நாடு துண்டு துண்டாகச் சிதறியது. யூகோஸ் வேலியா, போலந்து, சொக்க சுலோவக்கியா ஆகிய புதிய நாடுகள் உதயமாயின. மீண்டும் இது போன்ற உலக யுத்தம் மீளக்கூடாது என்று உலக நாடுகள் கருதின. அதற்காக "சர்வதேச சங்கம்" ஒன்று நிறுவப்பட்டது. இதில் பல நாடுகள் சேர்ந்தன. ஆனால் சங்கத்தை அமைக்கப் பெரும் முயற்சி எடுத்துக் கொண்ட அமெரிக்கா சேரவில்லை.

**முதல் உலகப் போரில் ஏற்பட்ட உயிர்ச்சேத விவரம்**

ஜெர்மனி - 17,70,000,
துருக்கி - 3,30,000,
ரஷ்யா - 17,00,000,
பல்கேரியா - 2,40,000,
பிரான்ஸ் - 13,60,000,
செர்பியா - 1,90,000,
ஆஸ்திரியா - 6,00,000,
அங்கேரி - 6,00,000,
பெல்ஜியம் - 60,000,
பிரிட்டன் - 9,10,000,
அமெரிக்கா - 50,000,
இத்தாலி - 6,50,000,
போர்ச்சுக்கல் - 13,000,
ருமேனியா-4,50,000

# ஓட்டுக்கு நோட்டா?



தமிழகத்தில் மே 16ம் தேதி சட்டப் பேரவைக்கு பொதுத்தேர்தல் நடைபெற உள்ளது. இந்த தேர்தலை சுமூகமாகவும் நேர்மையாகவும் அமைதியாகவும் நடத்தி முடிக்க தேர்தல் ஆணையம் உரிய நடவடிக்கைகள் எடுத்து வருகின்றது. தேர்தல் பாதுகாப்பு பணியில் முதல் முறையாக துணை ராணுவப் படையினர் 30 ஆயிரம் பேர் ஈடுபடுத்தப்பட உள்ளனர். இந்நிலையில், கடந்த 5 ஆண்டுகளில் மக்கள் நலத் திட்டங்கள், தொழில் துறை, மின்துறை, கல்வித் துறை, பொதுப் பணித்துறை, சுகாதாரத்துறை என்று எந்தத் துறையை எடுத்துக் கொண்டாலும் உருப்படியாக எந்த ஒரு திட்டத்தையும் செயல்படுத்தாத அதிமுக அரசு, ஆட்சி காலம் நிறைவு பெறும் கடைசி கால கட்டத்தில் பொதுத் தேர்தல் அறிவிப்பு வெளியிடப்படுவதற்கு முன்பாக, அவசரம் அவசரமாக திட்டங்களை அறிவித்து அதற்கு காணொலி காட்சிகள் மூலம் தொடக்க விழாவை நடத்தியது அனைவரும் அறிந்ததே. எல்லா துறைகளிலும் ஊழல் மலிந்து, மக்களின் நம்பிக்கையை முழுவதும் இழந்து விட்டதால், குறுக்கு வழியில் மக்களின் வாக்குகளை பெறும் முயற்சியில் இறங்கியுள்ளது. அதாவது தேர்தலுக்கு முன்பாக வாக்காளர்களுக்கு பணம் கொடுக்க எண்ணியுள்ளதாக செய்திகள் கசிகின்றன. அதை மெய்ப்பிக்கும் வகையில் கோடிக் கணக்கில் பணத்தை ஆம்புலன்ஸ், காவல்துறை வாகனங்களில் ஆளுங்கட்சியினர் கடத்திச் செல்வதாக எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டியுள்ளன.

தேர்தல் கண்காணிப்பு பறக்கும் படையினர், சிறிய, நடுத்தர வியாபாரிகள் பொருட்கள் கொள்முதல் செய்வதற்கும், பொதுமக்கள் சுபகாரியங்களுக்காவும் மருத்துவச் செலவுக்கும் எடுத்துச் செல்லும் பணத்தை பறிமுதல் செய்கின்றனர். உரிய ஆவணங்களை காட்டினாலும் பணத்தை திருப்பிக் கொடுக்காமல் அலைக்கழிப்பு செய்வ தாகவும் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. வாக்காளர்களுக்கு பணம் பட்டுவாடா செய்வதற்கு ஒத்திகை பார்க்கும் வகையில் இரவு நேரத்தில் அறிவிக்கப்படாத மின்தடையும் செய்யப்படுவதாக எதிர்க்கட்சிகள் குற்றம்சாட்டி உள்ளன. வாக்களிப்பதற்கு அரசியல் கட்சிகளிடம் இருந்து பணம் வாங்கிய குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால் அந்த வாக்காளருக்கு சிறை தண்டனை விதிக்கப்படும் என்று தேர்தல் ஆணையம் எச்சரித்துள்ளது வரவேற்கத்தக்கது. வாக்காளரை எச்சரிப்பதோடு நிறுத்தாமல், வாக்காளருக்கு பணம் கொடுத்து தேர்தலில் வெற்றி பெறும் வேட்பாளர் மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால் அவரது வெற்றி செல்லாது என்று அறிவிக்க மக்கள் பிரதிநிதித்துவ சட்டத்தில் இடம் உள்ளது. இதையும் தேர்தல் ஆணையம் எச்சரிக்கையாக வெளியிட வேண்டும்.

இந்தியாவிலேயே ஓட்டுக்கு பணம் கொடுப்பதில் தமிழகம் 2ம் இடத்தில் உள்ளது. முதல் இடத்தில் கர்நாடகா, மூன்றாவது இடத்தில் ஆந்திரா இருப்பதாகவும், ஒரு மக்களவை தொகுதிக்கு 50 கோடியும் சட்டசபை தொகுதிக்கு 10 கோடியும் செலவு செய்யப் படுவதாகவும் குற்றச்சாட்டு உள்ளது. வேட்பாளர்களின் செலவு கணக்கை கண்காணிக்க தேர்தல் ஆணையம் தகுந்த நடவடிக்கை எடுத்துள்ளது. இந்த தேர்தலில் 100 சதவீதம் வாக்குப் பதிவை எட்டுவதற்காக தேர்தல் ஆணையம் விழிப்புணர்வு பிரசாரத்தை தீவிரப்படுத்தி உள்ளது. இந்த நிலையில் வாக்காளர்கள் எல்லோரும் மனதளவில் ஓர் உறுதிமொழி எடுத்துக் கொள்ள வேண்டும். அதன்படி, வாக்களிப்பது என்பது நாடு நமக்கு அளித்த முதல் உரிமை. அந்த உரிமையை நிலைநாட்ட வாக்களிக்கும் கடமையில் இருந்து தவறக்கூடாது. இரண்டாவது, நமது உரிமையை விலை கொடுத்து வாங்க முயற்சி செய்யும் ஊழல் அரசியல்வாதி களின் வலையில் விழுந்துவிடக் கூடாது என்பதில் உறுதியாக இருக்க வேண்டும். இதுவே நமது நாட்டுக்கு நாம் செய்யும் மிகப் பெரிய தொண்டு. நம்மை ஆள்பவர்கள் நல்லவர்களாக இருக்க வேண்டும் என்றால் நாமும் நல்லவர்களாக இருக்க வேண்டும் என்பதில் சந்தேகம் இல்லை

**K.பாலகிருஷ்ணன்**

# கேள்விகள் இங்கே! விடைகள்?



மேக் என்பது எதன் வேகத்தை அளக்கப் பயன்படுகிறது

| வி | | | ம் |
|---|---|---|---|

உலகின் முதல் உயிரினம் என்று கருதப்படுவது

| | | டீ | | |
|---|---|---|---|---|

காந்திக்கு "மகாத்மா" பட்டம் கொடுத்தவர் யார்

| இ | | ந் | | நா | | | ர் |
|---|---|---|---|---|---|---|---|

இந்தியத் திட்டக் கமிஷனின் முதல் தலைவர் யார்

| ஜ | | ர் | ல் | | ரு |
|---|---|---|---|---|---|

இந்தியாவின் மினி சுவிட்சர்லாந்து என்று அழைக்கப்படும் நகரம் எது?

| லூ | | | னா |
|---|---|---|---|

**சரியான விடைகளை 20.05.2016-க்குள் அனுப்பி வைக்க வேண்டும். குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படும் முதல் மூன்று சிறுவர்களுக்கு பரிசுகள் காத்திருக்கிறது.**

**அனுப்ப வேண்டிய முகவரி**
ஆசிரியர்
**மித்ராடைம்ஸ்**
#501, சுருதிபிளாக், சித்ரா அவென்யூ,
9, சூளைமேடு ஹைரோடு, சென்னை-600 094
போன் : 044-23744661,23743007/8

# குழந்தைகளின் பயத்திற்கு பெற்றோரே காரணம்

ஒரு குழந்தை பயப்படுகிறது என்றால், நாம் உடனே பயம் அவன் கூடவே பிறந்தது என்கிறோம். உண்மையில் பயம் என்ற உணர்வு குழந்தைகள் பிறக்கும்போது கூடவே பிறந்துவிடுகிறதா? இல்லை என்கிறது உளவியல். பயத்துக்கு காரணம்



பெற்றோர்களே என்று மேலும் அது தெரிவிக் கிறது. பெற்றோர்கள் தங்கள் குழந்தை தைரியமாக இருக்க வேண்டும் என்று, கருவாக இருக்கும் போதே நினைத்தால், அவர்களுக்கு பிறக்கும் குழந்தை நிச்சயமாக வாழ்வில் வெற்றியாளனாக திகழ்வான் என்று கூறுகிறது.

மாறாக பெரியவர்களுக்கு பயந்து குழந்தை கட்டுப்பாடோடு வளர வேண்டும் என்று நினைப்பவர்களின் குழந்தைகள், பயம் உடன் பிறந்ததாகி விடுகிறது. அதே போல் குழந்தைகள், வளரும் பருவத்தில் சாப்பிடுவதற்காகவோ அல்லது வேறு எதற்காகவோ 'பூச்சாண்டி வருகிறான்' என்று பயமுறுத்தி பயமுறுத்தி வளர்த்தாலே வருங்காலத்தில் அவர்களுக்கு பயம் அதிகமாகி, தன்னம்பிக்கை குறையும் வாய்ப்பு இருக்கிறது. அதேபோல், 'இவனுடன் பேசாதே', 'அவனுடன் பழகாதே' என்று கூறி வளர்க்கப்படும் குழந்தைகள் ஒருவித பய உணர்ச்சியோடு வளருவார்கள். பயத்தை உளவியலாளர்கள் உடல்ரீதியாக, உணர்வு ரீதியாக என இரண்டு வகையாக பிரிக்கிறார்கள்.



உடல் ரீதியான பயத்திற்கு அதிக வியர்வை, வழக்கத்தைவிட அதிகமான இதயத்துடிப்பு போன்றவை அறிகுறிகள். எவ்வளவு பெரிய சோகம் என்றாலும் அதை வெளிக்காட்டாமல் உள்ளுக் குள்ளேயே அழுவதும், முகத்தை கடுமையாக உர்ரென்று வைத்துக் கொள்வதும் உணர்வு ரீதியான பயத்தின் வெளிப்பபாடுகள்.

பெரிய மீசையோடு திரிபவர்களுக்குத் தான் அதிக பயம் இருக்கும் என்கிறார்கள் உளவியலாளர்கள். பேய்ப் படங்கள் பயத்தை தருவதற்கு மட்டுமல்ல,



பயத்தை போக்குவதற்கும் பயன்படுமாம். அதற்காகவே சிலர் பேய்ப் படங்களை விரும்பிப் பார்க்கின்றனர். பயத்துக்கான காரணங்களில் ஒன்று, அளவு கடந்த எச்சரிக்கை உணர்வு கொள்வது. ஒரு சம்பவம் நடப்பதற்கு முன்பே எதிர்மறையாக, நடந்து விடுமோ என்று பூதாகரமாக கற்பனை செய்து கொள்வதில் பயம் தொடங்குகிறது. மேலே சுற்றிக் கொண்டிருக்கும் மின் விசிறி கீழே விழுந்து விடுமோ, பயணம் செய்யும் பஸ் விபத்தில் சிக்கி விடுமோ, பாலத்துக்கு அடியில் போகும்போது அந்த பாலம் இடிந்து நம் தலையில் விழுந்து விடுமோ என்றெல்லாம் நிறையப் பேர் பயப்படுவதுண்டு. இத்தகைய பயத்தைப் போக்க முதலில் குழந்தைகளை வெளியுலகோடு பழகவிட வேண்டும்.

வீட்டுக்குள்ளே அடைத்து வைத்து 'வீடியோ கேம்ஸ்' ஆட விடும்போது அவர்களுக்கு பயமும் உணர்ச்சிவசப்படும் தன்மையும் அதிகமாகி விடுகிறது. அதுமட்டுமல்ல, உடன் பழகும் நண்பவர்கள் பயம் மிக்கவர்களாக இருந்தால், உங்களுக்கு அந்த பய குணம் தொற்றிக் கொள்ளும் என்கிறார்கள். மனநல மருத்துவர்கள்.

**-சுஜாதா மூர்த்தி**

# முயன்றால் வெற்றி நிச்சயம்

வாய்ப்பை சரியாக பயன் படுத்தினால் சாதாரண மனிதனும் சாதனை படைக்கலாம் என்பது ரூ27 ஆயிரம் கோடிக்கு அதிபதியான பிரியன் விஷயத்தில் நிரூபணம் ஆகியுள்ளது. அமெரிக்காவில் கல்லூரி படிப்பை பாதியிலேயே நிறுத்திவிட்ட பிரியன் ஆக்டன், அதன் பின், யாஹூ இணையதள நிறுவனத்தில்



11 ஆண்டுகள் கடைநிலை ஊழியராக வேலை பார்த்தார். யாஹூ வேலை வெறுப்பு தட்டவே, கலிபோர்னியாவின் சிலிக்கான் வேலி பகுதியில் உள்ள பேஸ்புக், ட்விட்டர் உள்பட பல ஐடி நிறுவனங்களில் வேலைக்கு முயற்சி செய்தார்.

நினைத்தபடி ஒரு நல்ல வேலையை யாரும் அளிக்கவில்லை. இதனிடையே, வயது அதிகரிக்கவே, வருமானம் இல்லாதது அவரது மனதில் அச்சம் ஏற்படுத்தியது. எனினும் தனது முயற்சியை பிரியன் கைவிடவில்லை. இந்த நிலையில், சமூக வலைதளங்களில் 140 எழுத்துகளில் குறுந்தகவல் எனும் ட்விட்டர், பேஸ்புக் உட்பட்ட இணையதள பயன்பாடுகளை கண்ட பிரியனுக்கு, திடீரென ஒரு யோசனை உண்டானது. அதனை செயலாக்கத்திற்கு கொண்டுவர அவர் திட்டமிட்டார். தன்னுடன் யாஹூவில் பணியாற்றிய நண்பருடன் இணைந்து தனது நிறுவனத்தை தொடங்கினார். இதுதான் வாட்ஸ் ஆப் நிறுவனம், கடந்த 2009ம் ஆண்டு தோன்றிய வரலாறு. வாட்ஸ் ஆப் துணை நிறுவனராக பிரியன் செயல்பட்ட நிலையில், பேஸ்புக் நிறுவனத்திற்கு தங்களது நிறுவனத்தை விற்பனை செய்ய பிரியன் முன்வந்தார். இதையடுத்து ரூ13 லட்சம் கோடி விலை கொடுத்து பேஸ்புக் நிறுவனம் கடந்த 2014ம் ஆண்டு வாட்ஸ் ஆப்பை வாங்கியது எல்லோரும் அறிந்தது. அதிக விலைதான் என்றாலும், அதற்கேற்ப பலன் பேஸ்புக்கிற்கு கிடைத்திருப் பதாக கூறியுள்ள பேஸ்புக் நிறுவனம், வாட்ஸ் ஆப் நிறுவனம் தனித்தே இயங்கும் என அறிவித்தது.

வாட்ஸ் ஆப் விற்பனை மூலமாக பிரியனுக்கு கிடைத்துள்ள ரூ27 ஆயிரம் கோடி பங்குகள்தான் எல்லோரையும் வியப்பில் ஆழ்த்தி உள்ளது. ஆறு இலக்க சம்பளம் கிடைக்குமா என அலைந்தது போக பல இலக்க லாபம் அடைந்துள்ள பிரியனின் முயற்சியை பலரும் பாராட்டி உள்ளனர். வேலை கிடைக்கவில்லையே என விரக்தி அடையாமல், கிடைத்த வாய்ப்புகளை முறையாக பயன்படுத்தி பிரியன் முன்னேற்றம் அடைந்துள்ளார் என அவருக்கு பாராட்டு கிடைத்துள்ளது.

இதேபோல் டுயோடோ கார் கம்பெனியிலிருந்து தூக்கியெறியப்பட்டவர் தான் சோய்செரோ ஹோண்டா.

பேஸ்புக் நிறுவனத்தால் வேலையி லிருந்து நீக்கப்பட்டவர்தான் பிரியன் ஆல்டர். ஆகையால் தோல்வி நிரந்தரமில்லை. இறைவன் ஒரு கதவை மூடினால் நிச்சயம் மறுகதவை திறப்பார். ஒருபோதும் கைவிடமாட்டார் என்பது அனைவருக்கும் தெரிந்ததே. விடாமுயற்சி, இறைநம்பிக்கை, உழைப்பு இம்மூன்றும் இருந்தால் வெற்றி நிச்சயம்.





# ஏப்ரல் - மாத பலன்கள்




எடுத்த காரியங்களில் இடைஞ்சல்கள் வரும். எளிதாக முடிந்துவிடும் என்று எண்ணிய காரியங்கள் இழுபறி தரும். மன உளைச்சல் அதிக மாகும். குடும்பத்தினரை மகிழ்ச்சியாக வைத்துக் கொள்வதில் அதிக கவனம் செலுத்துவீர்கள். வரவில் குறை இருக்காது. பேச்சில் நகைச்சுவையை வெளிப்படுத்தி அனைவரின் கவனத்தையும் கவர்வீர்கள். சோதனைக்குரிய காலத்திலும் மிகுந்த தைரியத்துடன் செயல்பட்டு எதிர்பார்க்கும் வெற்றி அடைவீர்கள். உடன் பிறந்தோரால் ஒரு சில சங்கடத்தினை சந்திக்க நேரலாம். வண்டி, வாகனங்களின் பராமரிப்பு செலவு அதிகரிக்கக் கூடும். முன்பின் பழக்கமில்லாத நபர்களுக்கு உதவி செய்வதால் உபத்திரவங்களுக்கு ஆளாக நேரிடும். மாணவர்களுக்கு கல்வியில் முன்னேற கூடுதல் உழைப்பு அவசியம்.

**பரிகாரம்:** புன்னைநல்லூர் மாரியம்மனை வணங்கி வாருங்கள்.




கடந்த சில மாதங்களாக இழுபறியில் இருந்த விவகாரங்கள் முடிவிற்கு வரும். எதிர்கால நலன் கருதி திட்டமிடுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை நிலவும். வரவு நிலை சீராக இருக்கும். சேமிப்புகளில் நாட்டம் அதிகரிக்கும். உடன்பிறந்தோர் மற்றும் உறவினர்களுடன் உண்டாகும் கருத்து வேறுபாட்டினை பெரிதுபடுத்தாமல் இருப்பது நல்லது. வண்டி, வாகனங்களால் செலவுகள் அதிகரிக்கக் கூடும். அநாவசிய பிரயாணங்களைத் தவிர்ப்பது நல்லது. செல்போன், இன்டர்நெட் போன்ற தகவல் தொடர்பு சாதனங்களால் தொல்லைகளுக்கு ஆளாக நேரிடும். தாயார் வழி சொத்துகளால் ஆதாயம் காண்பீர்கள். . பொதுவாக எல்லா விவகாரங்களிலும் நிதானித்து செயல்படுவது நல்லது. சிறப்பான பலன்களைக் காணும் மாதமாக அமையும்.

**பரிகாரம்:** பஞ்சமுக நாகாத்தம்மனை வணங்கி வரவும்.




வாழ்க்கை தரத்தை உயர்த்திக் கொள்ளும் முயற்சியில் இறங்குவீர்கள். எதிலும் உரிய கவுரவம் எதிர் பார்ப்பீர்கள். பொருளாதார நிலையில் ஏற்ற இறக்கம் இருக்கும். பண வரவு செலவுகளை சமாளிக்கும் வகையில் இருக்கும். குடும்பத்தில் சலசலப்புகள் இருந்தாலும் மகிழ்ச்சி நிலவும். முன்பின் தெரியாதவருக்கு உதவப்போய் தர்மசங்கடமான நிலைக்கு ஆளாவீர்கள். தாயார் வழி உறவினர்களால் ஆதாயம் காண்பீர்கள். சுயதொழில் செய்வோர் கடும் உழைப்பினை வெளிப்படுத்தி அதற்கான பயனை அடைவார்கள். கலைத்துறையினர் திறமைக்கேற்ப வாய்ப்பு பெறுவர். உழைப்பால் உயரவேண்டிய நேரம் இது.

**பரிகாரம்:** ஞாயிறு தோறும் சரபேஸ்வர ஸ்வாமியை வழிபட்டு வாருங்கள்.




எளிதில் முடிய வேண்டிய காரியங்களும் இழுபறி தரும். மிகவும் நெருங்கிய ஒருவர் எதிர்பார்ப்பிற்கு மாறாக செயல்படுவார். அதனால் மன வருத்தம் வரும். விருப்பங்களை உடனுக்குடன் நிறைவேற்றி கொள்ள அவசரம் காட்டாது நிதானத்துடன் செயல்படுவது அவசியம். அவசரத்தால் தேவையற்ற பிரச்னைகளை சந்திக்க நேரிடும். வரவு திருப்தி தரும் வகையில் அமையும். நெடுநாளைய கடன் பிரச்னை ஒன்று முடிவிற்கு வரும். புதிதாக கடன் வாங்குவதை சிறிது காலத்திற்கு ஒத்தி வைப்பது நல்லது. குடும்பத்தில் சலசலப்பு நிலவி வரும். அநாவசிய பிரயாணங்களை தவிர்க்க வேண்டியது அவசியம்

**பரிகாரம்:** பவுர்ணமி நாளன்று சத்ய நாராயணவிரதம் மேற்கொள்வது நலம்.

## சிம்மம்

நினைப்பது ஒன்றும், நடப்பது ஒன்றுமாக இருக்கும். மன உளைச்சல் இருக்கும். திட்டமிட்ட பணிகள் முடியாமல் இழுபறியில் இருக்கும். எந்த ஒரு விஷயத்திலும் உணர்ச்சிவசப்படாது இருப்பது நல்லது. பேச்சில் கூடுதல் கவனம், எச்சரிக்கை அவசியம். பொருளாதார ரீதியாக சற்று சிரமமான சூழல் நிலவும். முன்பின் தெரியாத முற்றிலும் புதிய நபர்களை நம்பி எந்தச் செயலிலும் இறங்கக் கூடாது. தேவையற்ற பிரயாணங்களைத் தவிர்ப்பது நல்லது. எதிர்காலம் பற்றிய சிந்தனைகளால் மனதில் அநாவசிய குழப்பம் இருக்கும். மூட்டு வலி மற்றும் எலும்பு சார்ந்த பிரச்னைகளால் உடல்நிலையில் சிரமத்தினைக் காண நேரும்.

**பரிகாரம்:** விநாயகருக்கு சிதறு தேங்காய் உடைத்துவிட்டு பணியைத் துவக்கவும்.

## கன்னி

உங்கள் பணிகளுக்கு அடுத்தவர்களை சார்ந்திருக்க வேண்டியிருக்கும். எதிலும் தனித்து செயல்பட இயலாத சூழல் தோன்றும். நம்பியிருந்த ஒருவர் முக்கியமான நேரத்தில் உங்களுக்கு மாறாக செயல்படுவார். அதனால் மன வருத்தம் வரும். வரவு திருப்தி தரும். குடும்ப உறுப்பினர்களின் விருப்பங்களை நிறைவேற்றுவதில் அதிக கவனம் செலுத்துவீர்கள். உடன்பிறந்தோரால் கூடுதல் செலவுகள் ஏற்படும். தகவல் தொடர்பு சாதனங்கள் முக்கியமான நேரத்தில் செயலிழந்து சிரமம் தரும். முன்பின் தெரியாதவர்களை நம்பி புதிய முயற்சிகளில் ஈடுபடக்கூடாது. பிள்ளைகளால் நிம்மதி கூடும். வாழ்க்கைத் துணையின் வார்த்தைகளுக்கு மதிப்பளித்து செயல்படுவீர்கள்.

**பரிகாரம்:** ஓய்வு நேரத்தில் சிவாலயத்தில் உழவாரப்பணி மேற்கொள்ளவும்.

## துலாம்

கவலைகள் மறையும். டென்ஷன் குறையும். மனதில் விதவிதமான ஆசைகள் தோன்றினாலும், நல்லது கெட்டது அறிந்து செயல்படுவீர்கள். பொருளாதார நிலை வலுப்படும். பல்வேறு வழிகளில் பொருள் வரவு தொடரும். குடும்பத்தில் சலசலப்புகள் தோன்றினாலும் மகிழ்ச்சிக்குக் குறைவிருக்காது. சாமர்த்தியமான அணுகுமுறை, புத்தி சாதுர்யம் மற்றும் திறமையான வாக்கு சாதுர்யம் பிரச்னைக்குரிய விஷயங்களில் வெற்றி தேடித்தரும். உடன் பிறந்தோர் உதவிகரமாய் செயல்பட்டு வருவார்கள். உங்கள் பணிகளில் தகவல் தொடர்பு சாதனங்கள் முக்கிய இடம் வகிக்கும். சுயதொழில் செய்வோர் எதிர்பார்க்கும் தனலாபம் அடைய சிறிது காலம் காத்திருக்க வேண்டியிருக்கும். சாதகமான பலன்களை சந்திக்கும் மாதம் இது.

**பரிகாரம்:** உலகளந்த பெருமாளை வணங்கி வாருங்கள்.

## விருச்சிகம்

எண்ணிய காரியங்களை நடத்தி முடிப்பீர்கள். மதிப்பு, மரியாதை உயரும். பேச்சால் சிக்கலான காரியங்களில் வெற்றி கிடைக்கும். வாழ்க்கை தரம் உயரும். எதிர்கால திட்டங்களை வகுத்து செயல்படுவீர்கள். பொருளாதார சிக்கல் இருந்தாலும் செலவுகளை சமாளிக்கும் வகையில் வரவு இருக்கும். பேச்சில் கடுமையை தவிர்க்கவும். சில விஷயங்களுக்கு உடன்பிறந்தோரை சார்ந்திருக்க வேண்டி வரும். திடீர் விருந்தினர் வருகை இருக்கும். தகவல் தொடர்பு சாதனங்கள் உங்கள் நேரத்தை மிச்சப்படுத்தும். தொலைதூரப் பிரயாணங்கள் அனுகூலமாக அமையும். உறவினர்கள் சாதகமாக செயல்படுவார்கள். பிள்ளைகளின் சாதனைகளை பற்றி பேசி பெருமிதம் கொள்வீர்கள்.

**பரிகாரம்:** வியாழன் தோறும் நவகிரஹ குருபகவானுக்கு விளக்கேற்றி வழிபடவும்.



## தனுசு

சாதகமான பலன்கள் ஏற்படும். கவுரவம் உயரும். வரவுக்கு குறைவிருக்காது. செலவுகள் கூடினாலும் சமாளிப்பீர்கள். குடும்பத்தில் அமைதியான சூழல் நிலவி வரும். உடன்பிறந்தோருக்கு உதவி செய்ய வேண்டியிருக்கும். தகவல் தொடர்பு சாதனங்கள் தொழிலில் மிகுந்த உதவியாக இருக்கும். உங்கள் எண்ணங்களை பேச்சில் வெளிப்படுத்தாது எழுத்தின் மூலம் வெளிப்படுத்தினால் வெற்றி, நற்பெயர் கிடைக்கும். திடீர் மற்றும் அடிக்கடி பிரயாணம் செய்ய நேரிடலாம். வண்டி, வாகனங்களால் ஆதாயம் உண்டு. தகப்பனார் வழி உறவினர்களின் துணையோடு குடும்பப் பிரச்னைக்கு தீர்வு காண்பீர்கள். பிள்ளைகள் குறித்து பெருமிதம் கொள்வீர்கள். அவர்களது வாழ்வில் சுபநிகழ்வுகளுக்கான வாய்ப்பு உருவாகும்.

**பரிகாரம்:** திருப்பதி பாலாஜியை வணங்கி வர திருப்பம் காண்பீர்கள்

## மகரம்

மனதில் மகிழ்ச்சி குடி கொள்ளும். எதிலும் சாதகமான பலன்கள் கிட்டும். எண்ணிய காரியங்கள் சிறப்பாக முடியும். திட்டமிட்ட பணிகள் நடந்தேறும். எந்த ஒரு விஷயத்தையும் தீவிரமாக ஆராய்ந்து செயல்படுவீர்கள். தடைபட்டிருந்த தனலாபம் வரத்துவங்கும். குடும்ப பொருளாதார நிலை உயரும். சொன்ன சொல்லைக் காப்பாற்றுவதில் மிகுந்த சிரத்தை கொள்வீர்கள். பேச்சால் கவுரவம் உயரும். குடும்ப விசேஷங்களில் அனைவரையும் ஒருங்கிணைத்துச் செல்வதில் உங்களின் பொறுப்பான பணிகள் மிகுந்த முக்கியத்துவம் பெறும். உத்யோக ரீதியாக அலுவலகத்தில் நற்பெயரோடு பதவி உயர்விற்கான வாய்ப்பையும் பெறுவீர்கள். தொழிலில் அலைச்சல் அதிகரித்தாலும் சிறப்பான தனலாபம் கிடைக்கும்.

**பரிகாரம்:** வியாழன்தோறும் சாயிபாபா கோவிலில் அன்னதானம் செய்யவும்.

## கும்பம்

பொறாமை, போட்டிகளை சமாளித்து வெற்றி பெறுவீர்கள். குடும்பத்தில் அமைதியான சூழல் நிலவி வரும். எதிர்பார்ப்புகளை நிறைவேற்றிக் கொள்ளும் வகையில் வரவு தடையில்லாமல் இருக்கும். எந்த ஒரு விஷயத்திலும் அதிகம் பேசாது அமைதி காத்து வருவது நல்லது. உடன்பிறந்தோரால் நன்மை உண்டாகும். பங்காளிகளுக்குள் இருந்த கருத்து வேறுபாடு நீங்கும். தகவல் தொடர்பு சாதனங்களால் சாதக பாதகங்கள் இருக்கும். மூத்த குடும்ப உறவினர்களுடன் உரையாடி குடும்ப பாரம்பரியத்தை அறிந்து கொள்வீர்கள். வண்டி, வாகனங்களை இயக்கும் போதும், பிரயாணத்தின்போதும் அதிக எச்சரிக்கை அவசியம். பிள்ளைகளால் குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். அவர்களது விருப்பத்திற்காக சுற்றுலா செல்ல திட்டமிட நேரிடும்.

**பரிகாரம்:** குருவாயூரப்பனை வணங்கி வாருங்கள்.

## மீனம்

சாதகமான பலன்கள் ஏற்படும். கவுரவம், வருமானம் உயரும். விட்டுக் கொடுத்து சென்று உங்கள் தேவைகளை நிறைவேற்றி கொள்வீர்கள். எதிலும் உங்களுக்கு சரியென தோன்றுவதை பேசுவதால் மற்றவர்களுடன் கருத்து வேறுபாடு ஏற்படும். குடும்பத்தில் சலசலப்பும், கலகலப்பும் மாறி மாறி இடம்பிடிக்கும். பொருளாதார சிக்கல்கள் குறையும். அதே நேரத்தில் புதிதாக கடன் வாங்குவதை சிறிது காலத்திற்குத் தள்ளி வைப்பது நல்லது. உடன்பிறந்தோர் முக்கியமான நேரத்தில் துணை நிற்பார்கள். தகவல் தொடர்பு சாதனங்கள் உங்கள் பணிகளுக்கு பக்கபலமாக அமையும். பிள்ளைகள் குறித்த ஏக்கம் இருக்கும். ரத்தக் கொதிப்பு உள்ளவர்களுக்கு உடல்நிலையில் கூடுதல் கவனம் அவசியம். வாழ்க்கைத்துணை உங்கள் பணிகளுக்கு பக்கபலமாக துணை நிற்பார்.

**பரிகாரம்:** தினந்தோறும் காலையில் சூரிய நமஸ்காரம் செய்து வரவும்.




# DAY SCHOOL (OR) BOARDING SCHOOL FOR YOUR CHILD?????

There are pros and cons of both education formats and the answer really lies not in the format but in the life style and the priorities of the parents. The parental involvement today in raising the children is far more than what used to be back then.

Education in formative years requires an effort both at home and at school. In the two to five years age group, the role and responsibility of inculcating the initial values and daily habits in a child lie with the parents. This requires constant love and attention by both parents and maximum time with the child is essential.

Most homes today are nuclear families and in most cases, both parents work to earn a living. In cases where the grandparents stay in the same home, the issue is better addressed but still not good enough as the child still needs parental inputs and care.

The inter-personal relations and communication between parents have a major impact on children as they are most susceptible to impressions at an early age and these stay on for a lifetime. In such a scenario, it's always better to shift your child to a boarding school. The best age to admit your child to a boarding school is around seven years.

There are several advantages of a Day school. The child is always within view and is exposed to all kinds of information, entertainment and awareness, at all times, something that Boarders miss out on. It's often seen that when a Boarding school student returns home for holidays and interacts with his friends at home, the difference in general knowledge and awareness of events around us is lacking. Before television, internet and mobile came on; the gap between boarders and day scholars was wider. This gap has now



narrowed. The Boarders are now better informed of events happening in the country and the world.

**Perspective on Day schooling.**

The biggest drawback of keeping a child in a day school is pampering by the parents. This has nothing to do with the school but staying at home does impact the child's development. The problem lays not so much in each home but the fact that all children are exposed to varying degrees of indulgence, depending on their parent's economic status and therefore a child may or may not be privileged to get material benefits and lifestyle of other children.


A day school tends to have more children per class than a boarding school and therefore individual attention to a student becomes difficult. The class teacher's involvement with each student is only for that year. The advantage however, is that the competition is greater and therefore the pressure to achieve is higher.

**Perspective on Boarding School.**

A boarding school is a good solution to parents that cannot devote too much time to the child or are living in an area that is not conducive to bringing up a child. Boarding schools have several benefits. Firstly, all children get equal attention and all get the same benefits and follow the same lifestyle. All good boarding schools give maximum attention to overall development of a student and this starts with inculcating discipline to follow daily routine and rules.

All students are kept adequately occupied through a well-balanced daily routine in academics, sports and other co-curricular activities. Students begin to love the lifestyle and many are reluctant to return home during holidays. In fact, once holidays begin, they can't wait to get back which leaves many parents a tad disappointed but amused.

Another advantage is that given the smaller number of students and full time interaction with the teachers, the teachers develop a close bonding with students as they are very involved with the student's development in all aspects of emotional, physical, academic or sport and can monitor the progress far better than any teacher in a day school. This is the reason that students develop lifelong attachment and respect with their Boarding school and teachers.



The best part of living in a boarding school is that each student is taught to be independent and to take care of his own needs. Each student is exposed to all aspects of leadership through his time at school and the overall development is more balanced. Parents who have studied in boarding schools will swear by the benefits of overall development of a child.

So if you are at crossroads to a decision between day school and boarding school, evaluate all factors and see what will work best for your child.

But always think that the child is yours. No matter what your friends or relatives say, decide on your child's life better. Think twice before you leave your child in the boarding schools as many parents have single child. When you feel that your child may be well groomed in a boarding school, then visit as many schools as possible to examine the ambience, basic facilities and the academic excellence along with extracurricular activities where the child may always been engaged happily to choose their field of interest.

Do not ever make the child feel that he is pushed out of home due to some personal reasons or the misguider standing between the parents. The child may be mentally affected and he may not show interest towards learning. Encourage the child to be independent and possess intra – personal skills to have a well set-up future with his own decision.

The child who understands himself / herself will have a better place to settle in future and guide the other students of his surroundings.

Help a child to grow on his own by letting him be himself. Do not interfere by thinking that only you should decide your child's future for which he may plan to leave you for long. Be a good friend to your child. Discuss the day's happenings and make sure that both the parents and the child maintain transparency for your child's better future.

**UMADEVI DURAISAMY, M.A; M.ED;**





# நாம் ஏமாந்த கதை தெரியுமா?

1 சர்க்கரை அதிகமாக சாப்பிடக் கூடாது

2 அயோடின் உப்பு மட்டுமே சாப்பிட வேண்டும்

3 நாள் ஒன்றிற்கு 8 லிட்டர் நீர் குடித்தே ஆகவேண்டும்

4 இரண்டு தேக்கரண்டி எண்ணையை தினமும் குடித்தால் உடலுக்கு நல்லது

5. ஆயில் புல்லிங்

6. காம்பிளான் குடித்தால் வளரலாம்

7. ஹார்லிக்ஸ் ஆக்குமே பிள்ளைகளை ஸ்ட்ராங்கா ஹைக்டா சார்பா

8. கிளினிக் பிளஸ் கூந்தலை ஆக்கிடுமே அடர்த்தியா

9. பூஸ்ட் இஸ் த சீக்ரட் ஆஃப் மை எனர்ஜி

10. 2 நிமிடத்தில் சமைத்திடுங்கள் நூடுல்ஸ்

வீட்டில் இருக்கும் தொலைக்காட்சி பெட்டிகளில் ஓடும் பன்னாட்டு நிறுவனங்களின் விளம்பரங்களினால் ஒருவர் நம்மை எளிமையாக ஏமாற்ற முடியுமென்றால் உயர்நிலைப்பள்ளி களுக்கும் கல்லூரிகளுக்கும் சென்று நாம் கல்வி பயல்வதால் என்ன பயன் ????

நமது ஊரில் விளையும் நிலக் கடலையை உண்டால் ஆண்மைக் குறைபாடு ஏற்படும் என சில வருடங் களுக்கு முன் செய்திகள் வெளியாயின

அதன் பிறகு நிலக்கடலை மோகம் நம்மைவிட்டு பிரிந்துசென்றது அதனை தொடர்ந்து பாதாம் பிஸ்தா என வாங்கி உண்டோம்

அந்த இடைவெளியில் கடலைகள் நம் ஊரில் அதிகமாக தேங்க இதுதான் சமையம் என்று ஒட்டுமொத்தமாக உலகின் மிகப்பெரிய சாக்லேட் நிறுவனம் அதை குறைந்த விலைக்கு அள்ளிச் சென்றது

பின்விளைவு

பாதாம் பிஸ்த்தா பதித்த சாக்லேட்டுக்கு பதில் வெளிநாடுகளில் நிலக்கடலைகள் பதித்த சாக்லேட்டுகள் அமோக விற்பனையாக தொடங்கியது ஏனென்றால் அவர்களுக்கு தெரியும் நிலக் கடலை உடலுக்கு மிகவும் உகந்ததென்று சில வருடங்களுக்கு முன் அரிசியை அதிகளவு உண்பதால் நம் உடலின் சர்க்கரை அளவு அதிகமாகிறது என்ற தகவல் பரவி அது அனைவரையும் அரிசியை அதிகம் உண்ணவிடாமல் செய்தது அதற்கு மாறாக நாம் கோதுமை உணவை அதிகம் எடுத்துக்கொண்டோம்

பின்விளைவு

அதிக விலைக்கு பன்னாட்டு நிறுவனங்களால் மேலை நாடுகளுக்கு அரிசி ஏற்றுமதி செய்யப்பட்ட்து

உண்மையாக நமது உடலில் சர்க்கரை அளவை அதிகரிக்கும் உணவு எது தெரியுமா மைதா

சச்சின் கூறினார் என்று பூஸ்ட் வாங்கினோம் ஆனால் அதில் நாம் விளைவிக்கும் மக்காச்சோளமும் கேப்பையும்தான் இருக்கிறது என்பதை அறியாமல்

டோனி கூறினார் என்று பெப்சி குடித்தோம் இன்று இளநீரின் எல்லாம் மருத்துவகுணங்களை அறிந்தவன் கைக்கு கிடைத்துக்கொண்டிருக்கிறது

இப்படியே ஒவ்வொன்றையும் இழந்து கொண்டிருக்கிறோம் நாம் ஏமாற்றப்பட்டுக் கொண்டிருக்கிறோம் என்று உணராமல்

இன்னும் கொஞ்ச நாட்கள் சினிமாவிலும் கிரிக்கெட்டிலும் மூழ்கி விடுங்கள் நாளை நீங்கள் உங்களையே இழந்துவிடுவீர்கள் இறுதியாக ஒன்றே ஒன்றை கூறிக்கொள்கிறேன்

மதுக்கடைகள் அதிகரிப்பது மட்டும் தீங்கு அல்ல. மருத்துவமனைகள் அதிகரிப்பதும் தீங்கின் அடையாளம்தான்

**-சாகுல்ஹமீது**



**M.S.MOORTHY**
Managing Director

# MITRA GROUP OF COMPANIES

- ❖ Mitra Home Makers (P) Ltd,
- ❖ Eastman Technologies (P) Ltd,
- ❖ Mitra Pictures (P) Ltd,
- ❖ Moorthy & Associates,
- ❖ K.R.M.Home Makers (P) Ltd,
- ❖ Jana Mitra Charitable Trust,
- ❖ Mitra International Business Club,
- ❖ Mitra Security Services (P) Ltd,
- ❖ Mitra Financial Services,
- ❖ Mitra Times magazine.

**OFFICE**

501, Suruthi Block, Chitra Avenue, Choolaimedu High Road, Chennai - 94
Ph : 044-24743007 / 08, Mob. 8190828662 e-mail : msmoorthy68@yahoo.co.in
www.mitrahomemakers.com



மித்ரா குழுமத்தின் வெளியீடுகள்..

## மித்ரா டைம்ஸ்

(தமிழ்&ஆங்கில மாத இதழ்)

## மக்கள் ராஜ்யம்

(தமிழ் தினசரி)

## கழுகு பாலிடிக்ஸ்

(தமிழ் மாத இதழ்)

## நமது போலீஸ்

(தமிழ்&ஆங்கில மாத இதழ்)

மித்ரா டைம்ஸ்
மக்கள் ராஜ்யம், கழுகு பாலிடிக்ஸ்,
நமது போலீஸ்,
இதழ்களுக்கு மாவட்ட, தாலுக்கா வாரியாக
செய்திகள் சேகரித்து அனுப்ப துடிப்புள்ள
இளைஞர்கள் ஆர்வமுள்ளவர்கள் தேவை.

தொடர்புக்கு

9840719088
8681002002